# தின பூமி
thinaboomi.com

சேலம், சனி, மார்ச் 25, 2023 | சென்னை · மதுரை · திருச்சி · கோவை · நெல்லை · சேலம் · வேலூர் · பாண்டிச்சேரி | பக்கம் 8 | ₹ 3.00




**அமெரிக்கர்களை உளவு பார்க்கவில்லை: நாடாளுமன்றக்குழு முன் ஆஜராகி டிக்டாக் சி.இ.ஓ. நேரில் விளக்கம்**
...2-ம் பக்கம்

**இந்தியாவில் காசநோயை 2025-க்குள் ஒழிக்க இலக்கு: வாரணாசியில் பிரதமர் பேச்சு**
...3-ம் பக்கம்

**பாக்.கில் ஆசிய கோப்பை கிரிக்கெட்: இந்திய அணி மோதும் போட்டிகளை பொதுவான இடத்தில் நடத்த முடிவு**
...7-ம் பக்கம்



## டி.என்.பி.எஸ்.சி குரூப்-4 தேர்வு முடிவு வெளியீடு

சென்னை, மார்ச் 25-

கிராம நிர்வாக அலுவலர் (வி.ஏ.ஓ.) உள்பட குரூப்-4 பதவிகளில் வரும் காலி பணியிடங்களுக்கான எழுத்துத்தேர்வு கடந்த ஆண்டு (2022) ஜூலை மாதம் 24-ம் தேதி நடைபெற்றது. இந்தத் தேர்வை தமிழ்நாடு முழுவதும் 18 லட்சத்து 50 ஆயிரம் பேர் எழுதினர்.

இவர்களுக்கான தேர்வு முடிவு கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் வெளியிடப்படுவதாக இருந்த நிலையில், தேர்வு முடிவுகள் வெளியாவதில் தொடர்ந்து தாமதம் ஏற்பட்டது. இதையடுத்து சமூக வலைதளங்களில் தேர்வை எழுதிய தேர்வர்கள் தேர்வு முடிவை வெளியிடக்கோரி கோரிக்கை விடுத்து வந்தனர்.

அதன்படி இந்த மாத இறுதிக்குள் தேர்வு முடிவு வெளியாகும் என்று தேர்வை நடத்திய தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் (டி.என்.பி.எஸ்.சி.) அறிவித்து இருந்தது. இந்த நிலையில், டி.என்.பி.எஸ்.சி தேர்வு முடிவுகள் நேற்று வெளியிடப்பட்டன. இதனால், தேர்வர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.




● தலைமைச்செயலகத்தில், மறைந்த பின்னணி பாடகர் டி.எம்.சௌந்தரராஜனின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, சென்னையில் அவர் வாழ்ந்த இல்லம் அமைந்துள்ள மந்தைவெளி மேற்கு வட்டச்சாலைக்கு "டி.எம்.சௌந்தரராஜன் சாலை" என புதிய பெயர் சூட்டப்பட்ட சாலையின் பெயர் பலகையை நேற்று காணொலிக்காட்சி வாயிலாக, முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். அருகில் அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச்செயலாளர் வெ.இறையன்பு, டி.எம். சௌந்தரராஜனின் மகன்கள், மகள் மற்றும் குடும்பத்தினர் உடன் உள்ளனர்.

## தமிழகத்தில் 3 நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்பு

சென்னை, மார்ச் 25-

தமிழகத்தில் 3 நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்பு என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிவிப்பில்., தென் இந்திய பகுதிகளின் மேல் நிலவும் வளி மண்டலத்தின் கீழடுக்குகளில் கிழக்கு திசை காற்றும், மேற்கு திசை காற்றும் சந்திக்கும் பகுதி நிலவுகிறது. இதன் காரணமாக, 25.03.2023: தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 30-40 கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். 26.03.2023: தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். 27.03.2023 மற்றும் 28.03.2023: தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசான / மிதமான மழை பெய்யக்கூடும்.

### அவதூறு வழக்கில் 2 ஆண்டு சிறை தண்டனை எதிரொலி:

# எம்.பி. பதவியில் இருந்து ராகுல்காந்தி தகுதி நீக்கம்

### பாராளுமன்ற மக்களவை செயலகம் நடவடிக்கை

புதுடெல்லி, மார்ச் 25-

பிரதமர் மோடி குறித்து அவதூறு கருத்து தெரிவித்ததாக தொடரப்பட்ட வழக்கில் சூரத் நீதிமன்றம் 2 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்ததை அடுத்து பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தியை மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் கீழ் தகுதி நீக்கம் செய்து மக்களவை செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

**தொடர முடியாது...**

பிரதமர் மோடியை அவதூறாகப் பேசிய வழக்கில், காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்திக்கு 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து குஜராத்தின் சூரத் நீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்ப்பு வழங்கியது. இதையடுத்து, குற்றவியல் வழக்கில் 2 அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகள் தண்டனை பெறுபவர்கள் மக்கள் பிரதிநிதியாக தொடர முடியாது எனும் சட்டத்தின் கீழ், ராகுல் காந்தி தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

**கடும் விமர்சனம்...**

> **என்ன விலை ஆனாலும்....**
>
> அவதூறு வழக்கில் ராகுல் காந்திக்கு 2 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டதை தொடர்ந்து எம்.பி. பதவியில் இருந்து ராகுல் காந்தி தகுதி நீக்கம் செய்யப்படுவதாக மக்களவை செயலகம் அறிவித்துள்ளது. இந்த நிலையில் ராகுல் காந்தி தன்னுடைய டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவு ஒன்றில், "இந்தியாவின் குரலுக்காக நான் போராடுகிறேன். என்ன விலை வேண்டுமானாலும் கொடுக்க தயாராக இருக்கிறேன்" என்று இந்தியில் கூறியுள்ளார்.

கடந்த மக்களவைத் தேர்தலின்போது, கர்நாடகாவின் கோலார் பகுதியில் 2019 ஏப்ரல் 13-ம் தேதி நடந்த பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய ராகுல் காந்தி, "ஏன் அனைத்து திருடர்களும் மோடி என்ற குடும்பப் பெயரையே கொண்டுள்ளனர். நீரவ் மோடி, லலித் மோடி, நரேந்திர மோடி என்று எல்லா திருடர்களின் பெயர்களும் மோடி என்றே முடிவது ஏன்?" என்று கடுமையாக விமர்சித்திருந்தார்.

**அவதூறு வழக்கு...**

இது தொடர்பாக குஜராத்தை சேர்ந்த பா.ஜ.க. எம்எல்ஏ புர்னேஷ் மோடி, சூரத் தலைமை நீதித்துறை மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ராகுல் காந்தி மீது அவதூறு வழக்குத் தொடர்ந்தார். இந்திய குற்றவியல் சட்டம் 499, 500 ஆகிய பிரிவுகளின் கீழ் ராகுல் காந்தி மீது விசாரணை நடைபெற்றது. 2021 ஜூன் மாதம் ராகுல் காந்தி நீதிமன்றத்தில் ஆஜராகி, விளக்கம் அளித்தார். சுமார் 4 ஆண்டுகள் நீடித்த இந்த வழக்கில் கடந்த 17-ம் தேதி இரு தரப்பு வாதங்கள் நிறைவடைந்து, தீர்ப்பு ஒத்தி வைக்கப்பட்டது. மார்ச் 23-ம் தேதி தீர்ப்பு வழங்கப்படும் என்று மாஜிஸ்திரேட் எச்.எச். வர்மா அறிவித்திருந்தார்.

**குற்றவாளி என தீர்ப்பு**

இதையடுத்து, ராகுல் காந்தி உள்ளிட்டோர் சூரத் தலைமை நீதித்துறை மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் ஆஜராகினர். அனைத்துத் தரப்பினரும் ஆஜரான நிலையில் தீர்ப்பை வாசித்த மாஜிஸ்திரேட் வர்மா, காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி குற்றவாளி என்று தீர்ப்பளித்தார்.

**கடமையை மட்டுமே...**

தொடர்ந்து மனுதாரர் புர்னேஷ் மோடி தரப்பு வழக்கறிஞர்

(கடைசி பக்கம் பார்க்க)

## மந்தைவெளி மேற்கு சாலைக்கு டி.எம்.சவுந்தரராஜனின் பெயர்

### பெயர் பலகையை திறந்து வைத்தார் முதல்வர் மு.க.ஸ்டாலின்

சென்னை, மார்ச் 25-

சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று, மறைந்த பின்னணிப் பாடகர் டி.எம்.சௌந்தரராஜனின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சென்னையில் அவர் வாழ்ந்த இல்லம் அமைந்துள்ள மந்தைவெளி மேற்கு வட்டச் சாலைக்கு டி.எம்.சௌந்தரராஜன் சாலை எனப் புதிய பெயர் சூட்டப்பட்ட சாலையின் பெயர் பலகையை காணொலிக் காட்சி வாயிலாக முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

தமிழ் திரைப்பட பின்னணிப் பாடகர் டி.எம். சௌந்தரராஜன் 1923-ம் ஆண்டு மதுரையில் பிறந்தார். தனது இளம் வயதிலேயே இசைப் பயிற்சி பெற்று இசை ஞானத்தை வளர்த்தார். 1950-ம் ஆண்டு முதல் அரை நூற்றாண்டு காலம் தமிழ்த் திரையுலகில் சிறப்புமிக்க பாடகராகத் திகழ்ந்த அவர் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களை பாடி தமிழ் நாட்டு மக்கள் அனைவரின் உள்ளங்களிலும் நீங்கா இடம் பிடித்தார்.

டி.எம்.சௌந்தரராஜனுக்கு முன்னாள் முதல்வர் கருணாநிதியால் 1970-ம் ஆண்டு ஏழிசை மன்னர் என்ற பட்டம் வழங்கப்பட்டது. மேலும், 1969-ம் ஆண்டு கவியரசர் கண்ணதாசனால் இசைக் கடல் என்றும் போற்றப்பட்டார். 2003-ம் ஆண்டு டி.எம்.சௌந்தரராஜன் பத்மஸ்ரீ பட்டமும் பெற்றார். தனது குரல் வளத்தால் மக்கள் மனதில் இடம்பெற்ற டி.எம்.சௌந்தரராஜன் 25.5.2013 அன்று மறைந்தார்.

இந்நிலையில் சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று, மறைந்த பின்னணிப் பாடகர் டி.எம். சௌந்தரராஜனின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சென்னையில் அவர் வாழ்ந்த இல்லம் அமைந்துள்ள மந்தைவெளி மேற்கு வட்டச் சாலைக்கு டி.எம்.சௌந்தரராஜன் சாலை எனப் புதிய பெயர் சூட்டப்பட்ட சாலையின் பெயர் பலகையை காணொலிக் காட்சி வாயிலாக முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் டி.எம். சௌந்தரராஜன் மகன் உள்ளிட்ட குடும்பத்தினர் பங்கேற்றனர்.

### ஆன்லைன் சூதாட்ட தடை சட்ட மசோதா

## கவர்னரின் ஒப்புதலுக்காக மீண்டும் அனுப்பி வைப்பு

சென்னை, மார்ச் 25-

தமிழக சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட ஆன்லைன் சூதாட்ட தடை மசோதா நேற்று மீண்டும் கவர்னர் ஆர்.என்.ரவியின் ஒப்புதலுக்காக சட்டத்துறை மூலம் அனுப்பி வைக்கப்பட்டது.

ஆன்லைன் ரம்மி சூதாட்டத்தால் ஏராளமான பொதுமக்கள் பணத்தை இழந்து தற்கொலை செய்துகொள்ளும் சம்பவங்கள் தமிழகத்தில் அதிகரித்து வந்தது. இதனால் ஆன்லைன் சூதாட்ட தடை சட்ட மசோதா தமிழக சட்டசபையில் கடந்த 2022-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 19-ந்தேதி நிறைவேற்றப்பட்டு கவர்னரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

ஆனால் இந்த சட்ட மசோதாவுக்கு கவர்னர் ஆர்.என்.ரவி ஒப்புதல் வழங்காமல் முதலில் சில விளக்கங்கள் கேட்டு இருந்தார். அதற்கு சட்டத்துறையில் இருந்து தேவையான விளக்கம் அளிக்கப்பட்டது. ஆனாலும் அந்த விளக்கங்கள் கவர்னருக்கு திருப்தி அளிக்கவில்லை. இதனால் கடந்த 6-ந்தேதி ஆன்லைன் சூதாட்ட தடை சட்ட மசோதாவை கவர்னர் ஆர்.என்.ரவி தமிழக அரசுக்கு திருப்பி அனுப்பிவிட்டார். இதற்கு தமிழக அரசியல் கட்சி தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்து வந்தனர்.

இதைத்தொடர்ந்து ஆன்லைன் சூதாட்ட தடை சட்ட மசோதாவை மீண்டும் தமிழக சட்டசபையில் நிறைவேற்றி கவர்னரின் ஒப்புதலுக்கு அனுப்ப தமிழக அமைச்சரவை முடிவு செய்தது. அதன்படி சட்டசபையில் நேற்று முன்தினம் கவர்னர் திருப்பி அனுப்பி இருந்த ஆன்லைன் சூதாட்ட தடை சட்ட மசோதா அவை முன்பு வைக்கப்பட்டது.

இந்த தடை சட்ட மசோதாவை சட்டசபையில் மறு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அனுமதி கோரினார். இதற்கு சபாநாயகர் அப்பாவு அனுமதி அளித்ததை தொடர்ந்து ஆன்லைன் சூதாட்ட தடை சட்ட மசோதா உறுப்பினர்களின் பார்வைக்கு மீண்டும் வைக்கப்பட்டது. இந்த மசோதா மீது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், முன்னாள் முதலமைச்சர்

(கடைசி பக்கம் பார்க்க)

## மத்திய அரசுக்கு எதிராக 14 எதிர்க்கட்சிகள் மனு

### சுப்ரீம் கோர்ட்டில் ஏப்ரல் 5-ல் விசாரணை

புதுடெல்லி, மார்ச் 25-

புலனாய்வு அமைப்புகளை தவறாக பயன்படுத்துவதாக கூறி காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட 14 எதிர்க்கட்சிகள் சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்துள்ளன. இந்த வழக்கு மீதான விசாரணை ஏப்ரல் 5ம் தேதி நடைபெறும் என்று சுப்ரீம் கோர்ட் தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சிகள் தாக்கல் செய்துள்ள மனுவில், சிபிஐ, அமலாக்கத் துறை, போன்ற மத்திய புலனாய்வு அமைப்புகள் பாஜகவுக்கு எதிராக இருக்கும் கட்சிகளை மட்டும் குறிவைத்து செயல்படுவதாகவும், பாஜகவில் இணையும் தலைவர்கள் மீதான வழக்குகள் அடிக்கடி கைவிடப்படுகிறது அல்லது முடித்துவைக்கப்படுகிறது என்றும் தெரிவித்துள்ளனர். மேலும், புலனாய்வு அமைப்புகளின் கைது நடவடிக்கைக்கு முந்தைய மற்றும் பிந்தைய நடவடிக்கைகளின் வழிகாட்டுதல்களையும் கேட்டுள்ளன.

எதிர்க்கட்சிகளின் சார்பில் மூத்த வழக்கறிஞர் அபிஷேக் மனு சிங்வி தாக்கல் செய்த மனுவினை இரண்டு வாரங்களில் பட்டியலிடுவதாக தலைமை நீதிபதி டி.ஓய்.சந்திரசூட் தெரிவித்தார். சிங்வி தனது மனுவில், '95 சதவீத வழக்குகள் எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு எதிராகவே உள்ளன. கைது நடவடிக்கைக்கு முந்தைய, பிந்தைய வழிகாட்டுதல்களை நாங்கள் கேட்கிறோம்' எனத் தெரிவித்திருந்தார்.

காங்கிரஸ், திரிணமூல் காங்கிரஸ், ஆம் ஆத்மி, ஐக்கிய ஜனதா தளம், பாரதிய ராஷ்டிரீய சமிதி, ராஷ்டிரீய ஜனதா தளம், சமாஜ்வாதி கட்சி, சிவ சேனா (உத்தவ் தாக்கரே அணி), தேசிய மாநாட்டு கட்சி, தேசியவாத காங்கிரஸ், இடதுசாரிகள் மற்றும் திமுக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள், சுப்ரீம் கோர்ட்டில் இந்த மனுவினைத் தாக்கல் செய்துள்ளன.

காங்கிரஸ் முக்கியத் தலைவர் ராகுல் காந்திக்கு சூரத் நீதிமன்றம், நான்கு ஆண்டுக்கு முந்தைய அவதூறு வழக்கு ஒன்றில் வியாழக்கிழமை 2 ஆண்டுகள் சிறை தண்டனை வழங்கி தீர்ப்பளித்தது. இதனைத் தொடர்ந்து, சுப்ரீம் கோர்ட்டில் எதிர்க்கட்சிகள் இந்த மனுவினைத் தாக்கல் செய்துள்ளன.

எதிர்க்கட்சிகளின் இந்த ஒருங்கிணைப்பில் டெல்லி முதல்வர் அரவிந்த கெஜ்ரிவால் முக்கிய பங்காற்றியதாக அக்கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஆம் ஆத்மி கட்சியின் 2 முன்னாள் அமைச்சர்கள் அமலாக்கத் துறையால் கைது செய்யப்பட்டு சிறையில் உள்ளனர். அதேபோல் தெலங்கானா முதல்வரின் மகள் கவிதாவும், ராஷ்ட்ரீய ஜனதா தளம் தலைவர் தேஜஸ்வியும் மத்தியப் புலனாய்வு அமைப்புகளின் விசாரணை வளையத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

### பிளஸ்-2 பொதுத்தேர்வு எழுதாத மாணவர்களுக்கு

## ஜூலையில் துணை தேர்வு எழுத நடவடிக்கை

### சட்டசபையில் அமைச்சர் அன்பில் மகேஷ் விளக்கம்

சென்னை, மார்ச் 25-

தமிழகத்தில் பிளஸ்-2 பொதுத்தேர்வில் ஆப்சென்ட்டான மாணவர்களை கண்டறிந்து ஜூலையில் துணைத்தேர்வு எழுத நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சட்டசபையில் அமைச்சர் அன்பில் மகேஷ் தெரிவித்தார்.

தமிழக சட்டசபை கூட்டத்தொடரின் நேற்றைய நிகழ்வில் பிளஸ்-2 பொதுத் தேர்வில் மாணவர்கள் ஆப்சென்ட் குறித்து சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வரப்பட்டது. இந்த தீர்மானத்திற்கு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பதில் அளித்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

கொரோனா தொற்றால் பள்ளிக் கல்வித்துறை மட்டுமின்றி அனைத்து துறைகளும் பாதிக்கப்பட்டுள்ளது. பிளஸ்-2 பொதுத் தேர்வில் ஆப்சென்ட்டான மாணவர்களை கண்டறிந்து ஜூலையில் துணைத் தேர்வு எழுத நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.


வரும் கல்வியாண்டில் குறைந்தபட்ச வருகைப் பதிவேடு 75 சதவீதம் இருக்க வேண்டும் என்பதை பின்பற்ற அறிவுறுத்தப்பட்டுள்ளது. வாரத்தில் 3 நாட்கள் பள்ளிக்கு வராத மாணவர்கள் இனிமேல் கண்காணிக்கப்படுவார்கள். இடையில் நின்ற மாணவர்களில் 78,000 பேரை தொடர்ந்து கண்காணித்து தேர்வு எழுத வைத்துள்ளோம்.

பள்ளிக்கு வராத மாணவர்களை கண்டறிந்து பள்ளிக்கு அழைத்து வந்து தேர்வெழுத நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இதுபோன்ற நிலை வரக்கூடாது என்பதில் அரசு உறுதியாக உள்ளது. இடைநின்ற மாணவர்கள் மீது அரசு அதிக அக்கறை கொண்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.


## மார்க்கெட் விலை நிலவரம்



| BSE | NSE |
|---|---|
| -398.18 | -131.85 |
| பாயிண்ட் 57527.1 | பாயிண்ட் 16945.05 |



**தங்கம்**
1 சவரன் ₹44,480
1 கிராம் ₹5,560



**வெள்ளி**
1 கிலோ ₹75,700
1 கிராம் ₹75.70



**டாலர்** ₹82.40

**பெட்ரோல்** ₹102.63
**டீசல்** ₹94.24



---

### அமெரிக்கர்களை உளவு பார்க்கவில்லை:
# நாடாளுமன்றக்குழு முன் ஆஜராகி டிக்டாக் சி.இ.ஓ. நேரில் விளக்கம்



**வாஷிங்டன், மார்ச் 25-**

அமெரிக்கர்களை உளவு பார்த்து சீன அரசுக்கு தகவல் வழங்கி வருவதாக எழுந்த குற்றச்சாட்டை டிக் டாக் சிஇஓ சவ் சி சூவ் மறுத்துள்ளார்.

அமெரிக்காவில் கடந்த சில ஆண்டுகளாக டிக் டாக் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. இந்த நிலையில், அமெரிக்க மக்களை உளவு பார்த்து அமெரிக்க நாட்டைப் பற்றிய ரகசிய தகவல்களை சீனா அரசுக்கு டிக் டாக் வழங்கியதாக குற்றச்சாட்டு எழுந்தது. இதனைத் தொடர்ந்து அமெரிக்காவின் அரசு துறையில் பணி செய்பவர்கள் டிக் டாக் செயலியை பயன்படுத்துவதற்கு தடை விதிக்கப்பட்டது.

இந்த நிலையில், அமெரிக்கா முழுவதும் டிக் டாக்கிற்கு தடை விதிக்க வேண்டும் என்று அமெரிக்க நாடாளுமன்றத்தின் ஜனநாயக, குடியரசுக் கட்சி உறுப்பினர்கள் வலியுறுத்தி வந்தனர். இதில் டிக் டாக் மீதான குற்றச்சாட்டிற்கு விளக்கமளிக்க அதன் சிஇஓ சவ் சி சூவ் நாடாளுமன்றக் குழுவின் முன் ஆஜரானார்.

அங்கு அவர் பேசும் போது, "எங்கள் நிறுவனம் சீனாவுக்காகவோ, பிற நாடுகளுக்காகவோ செயல்படவில்லை என்று நான் உறுதியாக கூறுகிறேன். எங்கள் தளத்தை 150 மில்லியனுக்கும் அதிகமான அமெரிக்கர்கள் விரும்புகின்றனர். அவர்களை பாதுகாக்கும் பொறுப்பு எங்களுக்கு உள்ளது என்பது நன்கு தெரியும்" என்றார். சுமார் ஐந்து மணி நேரம் அமெரிக்க நாடாளுமன்ற குழுவிடம் டிக் டாக் சிஇஓ சவ் சி சூவ் பதிலளித்தார்.

---

# 8 அடி 3 அங்குல நீள தாடி வளர்த்த கனடா சீக்கியர்
### தனது சாதனையை தானே முறியடித்தார்

**ஸ்வீடன், மார்ச் 25-**

ஸ்வீடனை சேர்ந்த பிர்ஜெர் பெலாஸ் என்பவர் 5 அடி 9 அங்குலம் நீளத்துக்கு தாடி வளர்த்திருந்தார். இதுதான் ஏற்கனவே கின்னஸ் சாதனையாக இருந்தது. இந்த சாதனையை கடந்த 2008-ல் ஆண்டு கனடாவில் வசிக்கும் சீக்கியர் சர்வன் சிங் முறியடித்து புதிய கின்னஸ் சாதனை படைத்தார்.

அப்போது சர்வன் சிங் தாடியின் நீளம் 7 அடி 8 அங்குலமாக இருந்தது. அதன் பிறகு கடந்த 2010-ம் ஆண்டு இத்தாலியில் நடந்த சாதனை நிகழ்ச்சியில் அவரது தாடியை அளந்து பார்த்தனர். அப்போது அது 8 அடி 2.5 அங்குலமாக வளர்ந்து காணப்பட்டது.

இந்நிலையில் சர்வன் சிங் மீண்டும் தனது கின்னஸ் சாதனையை தானே முறியடித்து புதிய கின்னஸ் சாதனை படைத்துள்ளார். அவரது தாடியை அளந்த போது அது 8 அடி 3 அங்குலமாக வளர்ந்து காணப்பட்டது.

இதன் மூலம் தனது சாதனையை தானே மீண்டும் முறியடித்துள்ளார். மூன்றாவது முறையாக சாதனைப் பட்டத்தைப் பெற்றுத் தந்துள்ளது என்று கின்னஸ் உலக சாதனை கடந்த 22-ம் தேதி தெரிவித்துள்ளது.

அவரது தாடி இதற்கு முன்பு கருப்பாக காணப்பட்டது. ஆனால் தற்போது நரைத்த நிலையில் காணப்படுகிறது. இது குறித்து சர்வன் சிங் கூறுகையில், நான் 17 வயது முதல் தாடியை வளர்த்து வருகிறேன். இதுவரை ஒரு தடவை கூட தாடியை வெட்டியதில்லை. தாடி என்பது சீக்கியர்களின் முக்கியமான அம்சங்களில் ஒன்றாகும். எனவே இந்த தாடியை கடவுளின் பரிசாக கருதுகிறேன் என்று கூறினார்.

---

# நடிகர் அஜித்குமாரின் தந்தை பி.சுப்ரமணியம் காலமானார்
### நடிகர் விஜய் நேரில் ஆறுதல்

**சென்னை, மார்ச் 25-**

நடிகர் அஜித்குமாரின் தந்தை பி.சுப்ரமணியம் நேற்று (மார்ச் 24) காலமானார். அவருக்கு வயது 84. அவரின் மறைவை அடுத்து நடிகர் விஜய் நேற்று நேரில் சென்று ஆறுதல் கூறினார்.

கடந்த நான்கு ஆண்டுகளாகவே பக்கவாதம் மற்றும் வயது மூப்பின் காரணமான தொந்தரவுகளால் பாதிக்கப்பட்டிருந்த பி.சுப்ரமணியம் நேற்று காலை இயற்கை எய்தினார். இந்தத் தகவல் வெளியானதை அடுத்து சமூக வலைதளங்களில் அஜித் ரசிகர்கள் அவருக்கும், அவரது குடும்பத்தாருக்கும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். அஜித் தந்தை சுப்ரமணியத்தின் உடல் பெசன்ட் நகர் மின் மயானத்தில் இறுதிச் சடங்குகளுக்குப் பின்னர் தகனம் செய்யப்பட்டது.

முன்னதாக நடிகர் அஜித்குமாரின் தந்தை மறைவுக்கு திரையுலகினர் இரங்கல் தெரிவித்தனர். இதையடுத்து, எங்கள் தந்தையாரின் இறுதி சடங்குகள் ஒரு குடும்ப நிகழ்வாகவே இருக்க கருதுகிறோம். இறுதி சடங்குகளை தனிபட்ட முறையில் செய்ய ஒத்துழைக்கும்படி வேண்டிக்கொள்கிறோம் என அஜித் தரப்பில் இருந்து ஒரு அறிக்கை வெளியானது. இதையடுத்து நடிகர் அஜித்தின் தந்தை சுப்ரமணியம் உடல் பெசன்ட்நகர் மின்மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.



இந்நிலையில், தந்தையை இழந்த நடிகர் அஜித்தின் வீட்டிற்கு நடிகர் விஜய் நேரில் சென்று இரங்கல் தெரிவித்துள்ளார். சென்னை ஈஞ்சம்பாக்கத்தில் உள்ள அஜித் வீட்டிற்கு சென்று நடிகர் விஜய் ஆறுதல் கூறியுள்ளார்.

---

# அமெரிக்க மாகாணங்களில் பனிப்புயலுக்கு 5 பேர் பலி

**வாஷிங்டன், மார்ச் 25-**

அமெரிக்காவின் பெரும்பாலான மாகாணத்தில் கடுமையான பனிப்புயலில் வீசியதால் 5 பேர் உயிரிழந்தனர்.

அமெரிக்கா தற்போது வரலாறு காணாத அளவுக்கு மோசமான வானிலையை சந்தித்து வருகிறது. அங்கு பெரும்பாலான மாகாணங்கள் பனிப்புயலால் பாதிப்பை எதிர்கொள்கின்றன.

கலிபோர்னியா மாகாணத்தில் சமீபத்தில் பனிப்புயல் வீசியது. இதில் பல வீடுகள் மற்றும் அலுவலகங்களின் கண்ணாடிகள் உடைந்து சேதம் அடைந்தது. மேலும் பல்வேறு இடங்களில் மின் கம்பங்கள் சரிந்து விழுந்ததால் மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

இதனால் சான் பிரான்சிஸ்கோ மற்றும் சுற்றுப்பகுதிகளில் பல நகரங்கள் இருளில் மூழ்கி மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. இந்த பனிப்புயல் காரணமாக சான்பிரான்சிஸ்கோவின் வீதிகளில் காணும் இடமெங்கும் பனியால் மூடப்பட்டு இருக்கிறது.

அங்கு சாலைகளில் நிறுத்தியிருந்த கார்கள் மறையும் அளவுக்கு பனி படர்ந்துள்ளது. இதனால் நகரின் முக்கிய சாலைகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

ஆம்புலன்சுகள் வந்து செல்வதற்கே மணிக் கணக்கில் பயண நேரம் ஆகியது. எனவே பலர் ஆஸ்பத்திரிக்கு கூட செல்ல முடியாமல் அவதியடைந்தனர். தற்போது அங்கு ஓரளவு இயல்பு நிலை திரும்பி உள்ளது. இந்த பனிப்புயலில் 700-க்கும் மேற்பட்ட மரங்கள் சரிந்து விழுந்தன.

இந்த மரங்கள் விழுந்ததில் 2 பேர் பலியானார்கள். மேலும் கடும் குளிருக்கு 3 பேர் உயிரிழந்தனர். மேலும் சிலர் காயம் அடைந்தனர்.

அவர்களை மீட்பு குழுவினர் மீட்டு சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர். இந்த பனிப்புயல் காரணமாக பொதுமக்கள் குறிப்பாக முதியவர்கள், குழந்தைகள் தங்களது வீடுகளை விட்டு வெளியே வர வேண்டாம் என அரசாங்கம் எச்சரித்துள்ளது.

---

### அமெரிக்க, சீன செயலிகளை
# கட்டுப்படுத்த பிரான்ஸ் பார்லி.யில் வலியுறுத்தல்

**பாரீஸ், மார்ச் 25-**

அமெரிக்கா மற்றும் சீன நிறுவனத்தின் சமூக வலைதளங்களை கட்டுப்படுத்த வேண்டும் என பிரான்ஸ் நாடாளுமன்றத்தில் வலியுறுத்தப்பட்டது.

பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக சீனாவில் உள்ள பைட்டான்ஸ் நிறுவனத்தின் டிக் டாக் செயலிக்கு பல்வேறு நாடுகள் கட்டுப்பாடுகள் விதித்தன. அதன்படி பிரான்ஸ், ஜப்பான் உள்ளிட்ட நாடுகளில் டிக் டாக் செயலியை அரசின் மின்னணு சாதனங்களில் பயன்படுத்த தடை விதிக்கப்பட்டது.

இவை தனியுரிமையை மீறுவதாக குற்றச்சாட்டு இருந்தது. அது போல ரஷ்யாவில் டிக் டாக், ஸ்னப்-சாட், டெலிகிராம், வாட்ஸ் அப் போன்றவை பயங்கரவாத செயலிகளாக பரிந்துரை செய்யப்பட்டுள்ளன. இந்த நிலையில் தனது நாட்டின் பாதுகாப்பு காரணங்களுக்காக அமெரிக்கா மற்றும் சீன நிறுவனத்தின் சமூக வலைதளங்களை பயன்படுத்துவதை கட்டுப்படுத்த வேண்டும் என பிரான்ஸ் நாடாளுமன்றத்தில் வலியுறுத்தப்பட்டது.

---

# தொழுகையுடன் ரமலான் நோன்பு தொடங்கினர் இஸ்லாமிய மக்கள்

**சென்னை, மார்ச் 25-**

முஸ்லிம்களின் முக்கியமான பண்டிகைகளுள் ஒன்று ரமலான் எனப்படும் ரம்ஜான் பண்டிகை ஆகும். இந்த ரமலான் மாதம் முழுவதும் ஒவ்வொரு நாளும் காலை சூரிய உதயம் தொடங்கி மாலை சூரியன் மறையும் வரை உணவு உண்ணாமல், நீர் அருந்தாமல் நோன்பு இருப்பார்கள்.

மேலும் இந்த நாட்களில் வசதி இல்லாதவர்களுக்கும், ஏழை, எளிய மக்களுக்கும் உதவி செய்ய வேண்டும் என்பது இஸ்லாமிய மக்களின் கடமையாகும். இந்த உதவியை தான் சகத் என்கிறார்கள். மேலும் நோன்பு காலக் கட்டத்தில் முஸ்லிம்கள் திருக்குரான் அனைத்தையும் வாசிக்கவேண்டும்.

இந்த காலக்கட்டத்தில் பொறுமையுடன் இருக்க வேண்டும். கெட்ட பழக்கங்களை கைவிட வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் இறைவன் எப்போதும் அவர்களுக்கு அருகிலேயே பயணிப்பது போன்ற எண்ணம் ஏற்படும் என நம்பப்படுகிறது.

இதுதொடர்பாக தமிழக அரசின் தலைமை காஜி சலாவுத்தீன் முகமது ஆயுப் வெளியிட்டுள்ள அறிவிப்பில், தமிழகம் முழுவதும் 22-ம் தேதி பிறை தென்பட்டதால் நேற்று முன்தினம் மாலை ரமலான் மாத முதல் பிறையாக கணக்கிடப்பட்டு இரவு தொழுகை நடைபெறுகிறது. நோன்பு நோக்கவும், அடுத்த மாதம் (ஏப்ரல்) 8-ம் தேதி (சனிக்கிழமை) இரவு பத்ரு ஸஹாபாக்கள் நினைவு நாள் என்றும், 12-ம் தேதி மரீப் முதல் தொடங்க உள்ளது. 18-ம் தேதி மாலை பெரிய இரவு என அழைக்கப்படுகின்ற லைலத்துல் கதர் இரவு என்றும், ரமலான் ஈத் 21-ம் தேதி (வெள்ளிக்கிழமை) இரவு சந்தேக நாள் என நினைவுபடுத்தப்படுகிறது. அனைவரும் ரமலான் மாதத்தில் பகலில் நோன்பு வைத்து இரவில் இபாத்தில் ஈடுபடுமாறு கேட்டுக்கொள்கிறேன் என்று அதில் கூறப்பட்டுள்ளது. இதையடுத்து நேற்று முன்தினம் இரவு முஸ்லிம்கள் தொழுகையில் ஈடுபட்டதுடன், அதிகாலை முதல் நோன்பு தொடங்கினர்.

---

# நீருக்கடியில் புதிதாக அணு ஆயுத சோதனை நடத்திய வடகொரியா

**சியோல், மார்ச் 25-**

கிழக்கு கடற்கரை பகுதியில் நீருக்கடியில் அணுசக்தி தாக்குதல் நடத்தும் டிரோன் பரிசோதனையை நடத்தி உள்ளதாக வடகொரியா அரசு ஊடகம் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா, ஜப்பான், தென்கொரியா உள்ளிட்ட உலக நாடுகளின் எதிர்ப்பை மீறி வடகொரியா தொடர்ச்சியாக ஏவுகணை சோதனை நடத்தி வருகிறது. வடகொரியா தற்போது கடுமையான உணவு பஞ்சத்தில் சிக்கி தவித்தாலும் கண்டம் விட்டு கண்டம் பாயும் பாலிஸ்டிக் ஏவுகணை சோதனையில் ஈடுபட்டது.


இந்த மாதத்தில் மட்டும் தொடர்ச்சியாக இந்த சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தென்கொரியாவும், அமெரிக்காவும் கொரியா தீபகற்ப பகுதியில் கூட்டாக ராணுவ பயிற்சியில் ஈடுபட்டு வருவதால் அதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் வடகொரியா இந்த நடவடிக்கையில் இறங்கி இருக்கிறது.

இதன் தொடர்ச்சியாக நேற்று நீருக்கடியில் புதிய அணு ஆயுத சோதனை நடத்தி அதிர்ச்சி வைத்தியம் அளித்துள்ளது. கிழக்கு கடற்கரை பகுதியில் நீருக்கடியில் அணுசக்தி தாக்குதல் நடத்தும் டிரோன் பரிசோதனையை நடத்தி உள்ளதாக வடகொரியா அரசு ஊடகம் தெரிவித்து உள்ளது. கடலுக்கு அடியில் சுமார் 80 முதல் 120 மீட்டர் ஆழத்தில் இந்த சோதனை நடத்தப்பட்டதாக தெரியவந்துள்ளது.

நீருக்குள் கதிரியக்கத்தை ஏற்படுத்தும் விதமாக வடிவமைக்கப்பட்ட இந்த டிரோன் அணுசக்தி போரில் எச்சரிக்கையுடன் செயல்படும் என அந்நாட்டு அதிபர் கிம் ஜாங் உன் தெரிவித்து உள்ளார். தென்கொரியாவும், அமெரிக்காவும் கூட்டாக பயிற்சி மேற்கொண்டு வரும் சூழ்நிலையில் வடகொரியா நடத்தி இருக்கும் இந்த புதிய அணு ஆயுத சோதனை முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

---

### 25-03-2023




**மேஷம்:-** இன்று வீட்டில் எல்லா பாக்கியங்களும் நிறைந்திருக்கும். தெய்வ பக்தி அதிகரிக்கும். பெண்ணால் குடும்பத்தில் சந்தோஷம் இருக்கும். வழக்குகளில் வெற்றி கிடைக்கும்.

**ரிஷபம்:-** இன்று சுறுசுறுப்பு குறைந்து சோம்பல் அதிகரிக்கும். எதிலும் ஒரு நிறைவற்ற தன்மை நிலவும். பிறருக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். எதிர்பாராத செலவுகள் ஏற்படும்.

**மிதுனம்:-** வாகன, போஜன சுகங்கள் கூட, அவருக்கு என்ன பெரிய ஆள் எனப் பெயர் பெறுவீர்கள். காதல் வலையில் விழ நேரலாம். மனைவி மூலம் நன்மைகள் ஏற்படும்.

**கடகம்:-** தன லாபம் அதிகரிக்கும். புதிய நண்பர்கள் சேர்க்கையால் புதிய உற்சாகங்கள் பிறக்கும். தொழில் விரிவாக்கத்துக்கு அரசு ஆதரவும், அதிகாரிகளால் அனுகூலம் ஏற்படும்.

**சிம்மம்:-** தெய்வீக காரியங்களில் ஈடுபாடு அதிகரிக்கும். உங்கள் புதிய செயல்பாடுகளில் வெற்றி பெற ஓரளவு அக்கறை எடுத்தாலே போதுமானது. தன்னம்பிக்கை அதிகரிக்கும், முன்னேற்ற வாய்ப்புகள் கதவைத் தட்டும்.

**கன்னி:-** வழக்கு விவகாரங்களில் வெற்றி காண அவற்றை வேறு ஒரு நாளைக்கு ஒத்திப் போடுவது நல்லது. உயர் அதிகாரிகளிடம் பணிவின்றி நடந்தால் பிரச்சனைகள் எழும். எனவே, பணிவு அவசியம்.

**துலாம்:-** இன்று மதிப்பு மரியாதை கூடும். புதிய வாகன யோகம் ஏற்பட்டு ஜாலி ரைடு செல்வீர்கள். அன்பு நண்பர்கள் வரவு அதிக நன்மைகளை தரும்.திருமணம் போன்ற சுப காரியங்கள் நடைபெறும்.

**விருச்சிகம்:-** உங்கள் இனிய பேச்சு சாதுர்யத்தால் எடுத்த காரியங்கள் அனைத்திலும் வெற்றி அடைவீர்கள். வியாபாரிகளுக்கு பேச்சே மூலதனமாகும். அரசால் ஆதாயம் உண்டு.

**தனுசு:-** இன்று எதையும் அளவோடு சாப்பிடாவிட்டால் அஜீரணம் ஏற்படும். எடுத்த காரியங்கள் எவ்வகையிலேனும் தடைப்படும். மனக் கவலைகள் அதிகரித்து, வீண் அலைச்சல்கள் ஏற்படும்.

**மகரம்:-** இன்று கொஞ்சம் பொறுமை அவசியம். உற்றார், உறவுகளால் அதை சோதிக்கக் கூடிய அளவுக்குத் தொல்லைகள் ஏற்படும். பழகியவர்களே நம்பிக்கை மோசம் செய்வர்.

**கும்பம்:-** இன்று எடுத்த காரியங்கள் அனைத்திலும் அனுகூலமான பலன்களை எதிர்பார்க்கலாம். சுற்று வட்டாரத்தில் உங்கள் புகழ் ஓங்கும். வீட்டில் திருமணம் போன்ற சுபகாரியங்கள் ஏற்பட்டு, மகிழ்ச்சிகரமான தருணங்களாக அமையும்.

**மீனம்:-** குடும்பத்தில் ஒற்றுமை குறைவால் குழப்பங்கள் நிலவும். வீட்டில் ஏதாவது ஒரு விதத்தில் மன மகிழ்ச்சி குறையும். மாணவர்களுக்கு கல்வியில் தடைகள் ஏற்படலாம்.

---

### அரசுப் பள்ளிகளை மேம்படுத்தும் முயற்சி:
# அரசு ஊழியர்களுக்கு இறையன்பு அழைப்பு

**சென்னை, மார்ச் 25-**

அரசுப் பள்ளிகளை மேம்படுத்தும் முயற்சியாக அரசு ஊழியர்களுக்கு தலைமை செயலாளர் இறையன்பு அழைப்பு விடுத்துள்ளார்.

இது குறித்து தலைமை செயலாளர் இறையன்பு விடுத்துள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது,

முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த 2022-ம் ஆண்டு டிசம்பர் 19-ம் தேதி நம்ம ஊர் பள்ளி என்ற திட்டத்தை தொடங்கி வைத்தார். அதன் முன்னெடுப்பாக https://nammaschools.tnschools.gov.in என்ற இணையதள முகவரியை பயன்படுத்தி உள்ளே சென்று பள்ளியின் முன்னாள் மாணவர்கள் பதிவு செய்ய வேண்டும்.

இந்த இணையதளத்தில் பள்ளியில் பயின்ற மற்ற மாணவர்களையும் இந்த குழுவில் இணைத்து கொள்ள அழைப்பு விடுக்கும் அமைப்பு உள்ளது. அதை பயன்படுத்தி பள்ளியில் பயின்ற நண்பர்களையும் இக்குழுவில் இணைக்கலாம் என்று கூறப்படுகிறது.

நாம் பயின்ற பள்ளிக்கு நம்மால் முடிந்த பங்களிப்பை செய்வதன் மூலம் அரசு பள்ளிகளை மேம்படுத்த முடியும். நம் பள்ளி முதலில் எப்படி இருந்தது, நம் பங்களிப்பினால் எப்படி மாறியிருக்கிறது என்பதை இணையதளம் வாயிலாக பார்க்க முடியும். இந்த வெளிப்படை தன்மையே இந்த திட்டத்தின் சிறப்பம்சம் ஆகும்.

நாம் அனைவரும் இணைந்தால் தமிழ்நாட்டிலிருக்கும் அரசு பள்ளிகள் அனைத்தும் கல்வியிலும், கலைகளிலும், திறன்களிலும், அழகிலும், சுற்றுச்சூழலிலும், அமைதியிலும் உலகத்திற்கே ஒளி காட்டும் தீப்பந்தங்களாக திகழும். எனவே நாம் அனைவரும் ஒன்றுபட்டு செயல்பட வேண்டும். இவ்வாறு அதில் தலைமை செயலாளர் இறையன்பு தெரிவித்துள்ளார்.

---

### நாட்டை தவறாக வழிநடத்தி விட்டேன்:
# பிரிட்டன் மக்களிடம் மீண்டும் மன்னிப்பு கோரினார் ஜான்சன்

**லண்டன், மார்ச் 25-**

இங்கிலாந்தில் பிரதமராக போரிஸ் ஜான்சன் இருந்த போது, நவம்பர் 2020-ல் கொரோனா விதிமுறைகளை மீறி அரசு மற்றும் கன்சர்வேடிவ் கட்சி ஊழியர்களுக்கு கூட்டம் நடத்தி விருந்து அளித்ததாக புகார் எழுந்தது. இதனால் அவர் பிரதமர் பதவியை இழக்க நேர்ந்தது.

இது தொடர்பான வழக்கை நாடாளுமன்ற பொது சபை சிறப்புரிமை குழு விசாரித்து வருகிறது. இந்த வழக்கு தொடர்பாக போரிஸ் பாராளுமன்றத்தில் ஏற்கனவே மன்னிப்பு கோரியுள்ளார். அப்போது அவருக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

இந்நிலையில், இது தொடர்பாக போரிஸ் ஜான்சனிடம் சிறப்புரிமை குழு மீண்டும் விசாரணை நடத்தியது. அப்போது அவர், இரண்டு மூத்த அதிகாரிகள் விலகுவதாக கூறினர். இதனால், கூட்டத்தை கூட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. நாட்டை கவனக்குறைவாக, தவறாக வழி நடத்தியதற்காக மன்னிப்பு கேட்டு கொள்கிறேன் என்று தெரிவித்தார்.

---

### எதிர்க்கட்சிகளின் ஒற்றுமையால் அச்சம்:
# ராகுல் தகுதி நீக்கம் குறித்து அமைச்சர் உதயநிதி கருத்து

**சென்னை, மார்ச் 25-**

எதிர்க்கட்சிகளின் ஒற்றுமை பாசிஸ்ட்டுகளை அச்சமூட்டியுள்ளதாக, தமிழக அமைச்சரும், திமுக இளைஞர் அணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

ராகுல் தகுதி நீக்கம் குறித்து உதயநிதி ஸ்டாலின் தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "தேர்தல் பேச்சு தொடர்பாக பாஜகவினர் தொடர்ந்த அவதூறு வழக்கில், காங்கிரஸின் ராகுல் காந்திக்கு 2 ஆண்டுகள் சிறையென தீர்ப்பு வந்ததும்,அவரை எம்பி பொறுப்பிலிருந்து தகுதி நீக்கம் செய்துள்ள மத்திய பாஜக அரசை வன்மையாக கண்டிக்கிறேன். எதிர்க்கட்சிகளின் ஒற்றுமை பாசிஸ்ட்டுகளை அச்சமூட்டியுள்ளது" என்று அதில் கூறியுள்ளார்.

---

**மரம்
மனிதனின்
உரம்**

---

### இலங்கை சிறையில் இருந்து
# 4 புதுக்கோட்டை மீனவர்கள் விடுதலை

**புதுக்கோட்டை, மார்ச் 25-**

இலங்கை கடற்படையால் சிறைபிடிக்கப்பட்ட புதுக்கோட்டை மீனவர்கள் 4 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் இன்னும் ஓரிரு நாட்களில் சொந்த ஊர் திரும்புவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப்பட்டினத்தில் இருந்து கடந்த 11-ம் தேதி காலை 7 மணியளவில் மீன்துறை அலுவலக அனுமதியுடன் 172 விசைப்படகுகள் கடலுக்கு மீன் பிடிக்க சென்றன. இதில் ஆரோக்கியராஜ் (54) என்பவருக்கு சொந்தமான விசைப்படகில் அவர் மற்றும் அசோக் (28), கருப்பு (22), சக்தி (20) ஆகிய 4 பேரும் சென்றிருந்தனர்.

அவர்கள் அன்று நள்ளிரவில் இந்திய கடல் எல்லையான நெடுந்தீவை அடுத்த அனலைத் தீவு அருகே வலைகளை விரித்து மீன் பிடித்துக் கொண்டு இருந்தனர். கரையில் இருந்து சுமார் 30 நாட்டிக்கல் மைல் தொலைவில் அவர்கள் மீன் பிடித்து கொண்டிருந்தபோது இலங்கை கடற்படையினர் அந்த படகில் இருந்து விரித்திருந்த வலைகளை அறுத்து சேதப்படுத்தியுள்ளனர்.

மேலும் ஆரோக்கியராஜூக்கு சொந்தமான விசைப் படகை சிறைப்பிடித்து, அதிலிருந்த 4 மீனவர்களையும் கைது செய்தனர். பின்னர் யாழ்ப்பாணத்தில் உள்ள கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்ட அவர்களை சிறையில் அடைக்க நீதிபதி உத்தரவிட்டார்.

இதற்கிடையே அந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதி, கைதான 4 பேரையும் விடுதலை செய்து உத்தரவிட்டார். மீண்டும் இதே போல் எல்லைதாண்டி வந்து மீன் பிடித்தால் 2 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதிக்கப்படும் என்றும் எச்சரித்தார்.

இதையடுத்து விடுதலை செய்யப்பட்ட புதுக்கோட்டை மீனவர்கள் 4 பேரும் இன்னும் ஓரிரு நாட்களில் சொந்த ஊர் திரும்புவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# மாநில பேரிடர் மேலாண்மை கொள்கை: முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்

**சென்னை, மார்ச் 25-**

சென்னை தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை திட்டம் - 2023 மற்றும் மாநில பேரிடர் மேலாண்மை கொள்கை ஆகியவற்றை முதல்வர் மு.க. ஸ்டாலின் நேற்று வெளியிட்டார்.

மேலாண்மை திட்டம்

இந்த மாநில பேரிடர் மேலாண்மைத் திட்டத்தில், மாநிலம் சந்தித்து வரும் பேரிடர்கள், தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை ஆணையம், மாநில செயல்பாட்டு குழு, மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையம், பேரிடர் மேலாண்மையில் ஈடுபடும் பல்துறைகளின் பங்கு, இதர துறைகள் மற்றும் பங்கேற்பாளர்கள் குறித்த விளக்கம் வழங்கப்பட்டுள்ளது. வெள்ளம், சுனாமி, சூறாவளி, வறட்சி, வெப்பக் காற்று, நிலச்சரிவுகள், பூகம்பம், இரசாயன தொழிற்சாலைகளில் ஏற்படும் விபத்துகள், அணுமின் நிலையங்கள், கதிர் வீச்சுகள் போன்ற பல்வகை பேரிடர்களை கையாளுவதற்கு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் குறித்தும், மாநிலத்தில், பல்வேறு வகையான பேரழிவுகளால் பாதிப்பிற்குள்ளாகக் கூடிய பகுதிகள் பற்றியும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அரசு துறைகளால் செயல்படுத்தப்படும் திட்டப் பணிகள் மூலம் பேரிடர் தணிப்பு மற்றும் பருவ கால மாற்றங்களின் சீற்றத்தணிப்பு ஆகியவற்றை மேற்கொள்ள வேண்டியதின் அவசியம், அதற்கான சாத்தியக்கூறுகள், நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய கொள்கைகள், திட்டமிடுதல், நிதி ஒதுக்கீடு, துறைகள் வாரியான பேரிடர் தணிப்பு சாத்தியக்கூறுகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

வயது முதிர்ந்தோர், மாற்றுத் திறனாளிகள், குழந்தைகள், மூன்றாம் பாலினத்தவர்கள் ஆகியோருக்கு பேரிடர் காலங்களில் வழங்கப்பட வேண்டிய பாதுகாப்பு முன்னுரிமைகள் குறித்தும், பல்வேறு துறைகளின் பொறுப்பு மற்றும் பங்களிப்பு குறித்தும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

பேரிடர் காலங்களில் பின்பற்றப்பட வேண்டிய ஊடக மேலாண்மை குறித்தும், பேரிடர் மீட்பு மற்றும் மறுசீரமைப்பில் முன்னர் இருந்ததை விட தரமான, சிறப்பான கட்டமைப்புகளை உருவாக்குதல் குறித்தும் விளக்கப்பட்டுள்ளது.

மேலாண்மை கொள்கை

ஒரு வலுவான பேரிடர் மேலாண்மை இயக்கத்தின் மூலம் அனைத்து வகை பேரிடர்களின் எதிர்மறையான விளைவுகளை குறைத்து, உயிரிழப்பு, பொது சொத்துக்கள் மற்றும் அதிக முக்கியத்துவம் வாய்ந்த உட்கட்டமைப்புகளின் சேதம் ஆகிவற்றை தவிர்த்தல், அரசு உருவாக்கிய பொருளாதார மற்றும் வளர்ச்சி ஆதாயங்களை இழக்காது இருத்தல் என்பதே மேம்படுத்தப்பட்ட தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மைக் கொள்கையின் நோக்கமாகும்.

தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மைக் கொள்கை, பல்வகை பேரிடர்களுக்கான எச்சரிக்கை அமைப்பு, ஆயத்த, பேரிடர் பாதிப்புகளின் மதிப்பீடு மற்றும் அபாயம் குறித்த பகுப்பாய்வு, பேரிடர் அபாயத்தைக் குறைப்பதற்கான தணிப்பு நடவடிக்கைகள் மற்றும் அனைத்துத் துறைகளால் செயல்படுத்தப்படும் வளர்ச்சித் திட்டங்களில், பேரிடர் அபாயக் குறைப்பு பணிகளுக்கு முன்னுரிமை வழங்கி இணைந்து செயல்படுத்துதல் ஆகியவற்றை அதிகரிப்பதற்கு கவனம் செலுத்துகிறது.

மேலும், பேரிடர்களால் ஏற்படும் இறப்பு, பாதிப்புக்குள்ளாபவர்களின் எண்ணிக்கை, நலிந்த பிரிவருக்கு ஏற்படும் பாதிப்பு மற்றும் அடிப்படை சேவைகளின் பாதிப்பு, பொருளாதார இழப்பு ஆகியவற்றை குறைப்பதற்கு இக்கொள்கை முக்கியத்துவம் அளிக்கிறது.

பேரிடர் அபாயக் குறைப்பிற்கு தெளிவான வழிகாட்டுதலை வழங்கும் இந்தக் கொள்கை, பேரிடர் அபாயத்தைக் குறைப்பதற்கான உலகளாவிய மற்றும் தேசிய கட்டமைப்பின் அடிப்படையிலும், மாநிலத்தின் தொலைநோக்கு பார்வை மற்றும் முன்னுரிமைகளுக்கு ஏற்றவாறும் உருவாக்கப்பட்டுள்ளது.

# நடிகர் அஜித்குமாரின் தந்தை மரணம்: முதல்வர் மு.க. ஸ்டாலின் இரங்கல்

**சென்னை, மார்ச் 25-**

நடிகர் அஜித்குமாரின் தந்தை மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.

தமிழ் சினிமாவில் பிரபல நடிகராக இருக்கும் அஜித்குமாரின் தந்தை சுப்ரமணியம் (85) நீண்ட நாட்களாக உடல் நலக்குறைவு காரணமாக சிகிச்சை பெற்று வந்தார். அவருக்கு வீட்டில் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில், நடிகர் அஜித்குமாரின் தந்தை சுப்ரமணியம் உடல்நலக் குறைவால் சென்னையில் உள்ள வீட்டில் நேற்று காலை காலமானார். நடிகர் அஜித்குமாரின் தந்தை மறைவுக்கு திரையுலகினர் இரங்கல் தெரிவித்தனர். இதையடுத்து நடிகர் அஜித்தின் தந்தை சுப்ரமணியம் உடல் பெசன்ட் நகர் மின்மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்நிலையில் நடிகர் அஜித்குமாரின் தந்தை மறைவுக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், நடிகர் அஜித்குமாரின் தந்தை சுப்பிரமணியம் உடல்நலக்குறைவால் மறைந்த செய்தி கேட்டு வருந்தினேன். தந்தையின் பிரிவால் வாடும் அஜித்குமாருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில் முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார். மேலும், தமிழக முதல்வர், அஜித்குமாரை தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு, அவரது தந்தை மறைவிற்கு தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொண்டார்.

# நடிகர் அஜித்தின் தந்தை உடலுக்கு அமைச்சர் உதயநிதி நேரில் அஞ்சலி

**சென்னை, மார்ச் 25-**

நடிகர் அஜித்தின் தந்தை உடலுக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேரில் அஞ்சலி செலுத்தினார். தமிழ் சினிமாவில் பிரபல நடிகராக இருக்கும் அஜித்குமாரின் தந்தை சுப்ரமணியம் (86) நீண்ட நாட்களாக உடல் நலக்குறைவு காரணமாக சிகிச்சை பெற்று வந்துள்ளார். இவருக்கு வீட்டில் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில், நடிகர் அஜித்குமாரின் தந்தை சுப்ரமணியம் உடல்நலக் குறைவால் சென்னையில் உள்ள வீட்டில் நேற்று அதிகாலை 3:15 மணியளவில் காலமானார். நடிகர் அஜித்குமாரின் தந்தை மறைவுக்கு திரையுலகினர் பலரும் இரங்கல் தெரிவித்தனர். இந்நிலையில், நடிகர் அஜித்தின் தந்தை உடலுக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார். சென்னையில் உள்ள அவரது வீட்டிற்கு சென்று உதயநிதி ஸ்டாலின் அஞ்சலி செலுத்தினார்.

# இந்தியாவில் காசநோயை 2025-க்குள் ஒழிக்க இலக்கு

## வாரணாசியில் பிரதமர் மோடி பேச்சு

**வாரணாசி, மார்ச் 25-**



இந்தியாவில் காசநோயை 2025-ம் ஆண்டுக்குள் ஒழிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக வாரணாசியில் நடைபெற்ற மாநாட்டில் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

பிரதமர் மோடி நேற்று உத்தரபிரதேச மாநிலம் வாரணாசிக்கு சென்றார். அங்கு உலக காசநோய் தினத்தையொட்டி நடந்த ஒரே உலகம் காசநோய் மாநாட்டில் பங்கேற்றார். இதில் காசநோய் இல்லா பஞ்சாயத்து முன்னெடுப்பு பராமரிப்பு மாதிரி போன்ற முயற்சிகளை தொடங்கி வைத்தார்.

காசநோய்க்கான தேசிய தடுப்பு சிகிச்சை, இந்தியாவில் காசநோய் 2023 ஆண்டறிக்கை ஆகியவற்றை வெளியிட்டார். காசநோய் தடுப்பு பணிகளில் சிறப்பாக செயல்பட்ட மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு விருதுகள் வழங்கினார். மாநாட்டில் பிரதமர் மோடி பேசியதாவது:-

இந்த உச்சி மாநாடு காசியில் நடப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. சில காலத்திற்கு முன்பு இந்தியா ஒரே பூமி, ஒரே ஆரோக்கியம் என்ற பார்வையை முன்னெடுத்து செல்ல முயற்சி எடுத்தது. தற்போது ஒரே உலக காச நோய் உச்சி மாநாடு மூலம் இந்தியா உலகளாவிய நன்மைக்கான மற்றொரு தீர்மானத்தை நிறைவேற்றுகிறது. கடந்த 9 ஆண்டுகளில் காசநோய்க்கு எதிரான போராட்டத்தில் இந்தியா மக்கள் பங்கேற்பின் மூலம் சிறப்பான பணியை செய்து உள்ளது. காசநோயை ஒழிப்பதற்காக உலகளாவிய இலக்கு 2030-ம் ஆண்டு ஆகும். ஆனால் இந்தியா 2025-ம் ஆண்டுக்குள் காசநோயை முடிவுக்கு கொண்டு வரும் இலக்கில் செயல்பட்டு வருகிறது. 80 சதவீத காசநோய் மருந்துகள் இந்தியாவில் தயாரிக்கப்படுகின்றன. இது உலக நன்மைக்காக செயல்படும் நமது மருந்தின் திறமையை வெளிப்படுத்துகிறது. இவ்வாறு பிரதமர் மோடி கூறினார்.

# ராகுலின் பதவி பறிப்பு சரியான நடவடிக்கையே

## பாரதிய ஜனதா விளக்கம்

**புதுடெல்லி, மார்ச் 25-**

ராகுல் காந்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி பறிக்கப்பட்டது சரியான நடவடிக்கையே என்று பாஜக மூத்த தலைவரும், மத்திய அமைச்சருமான புபேந்தர் யாதவ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அவர், ''இது நீதிமன்றத்தின் தீர்ப்பு. ஒவ்வொருவரும் இதனை ஏற்கத்தான் வேண்டும். ராகுல் காந்தி குற்றவாளி என்று நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. தேர்தல் காலங்களில் சமூகங்களை சிலர் இழிபடுத்துகிறார்கள். இதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும். அந்த வகையில், இந்தத் தீர்ப்பு நாடு முழுவதற்கும் ஒரு நல்ல செய்தியை கொடுத்திருக்கிறது'' என தெரிவித்துள்ளார்.

தீர்ப்பு குறித்து கருத்து தெரிவித்துள்ள பாஜக மூத்த தலைவரும் மத்திய அமைச்சருமான புபேந்தர் யாதவ், '' ஒட்டுமொத்த சமூகத்தையும் எப்படி திருடர்கள் என ராகுல் காந்தி கூறலாம் ? பேச்சு சுதந்திரம் என்பது எந்த சமூகத்தையும் அவமதிப்பதற்கான உரிமை அல்ல. ராகுல் காந்தி ஓபிசி சமூகத்தை அவமதித்திருக்கிறார். அதற்காக அவர் மன்னிப்பு கேட்கவும் இல்லை. வெளிநாடு சென்றபோதும் அங்கு நாட்டுக்கு அவப்பெயரை ஏற்படுத்தி உள்ளார்'' என குற்றம்சாட்டியுள்ளார்.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள மத்தியப் பிரதேச முதல்வர் சிவ்ராஜ்சிங் சவுகான், ''தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் அதற்கான விளைவுகளை அனுபவித்தே தீர வேண்டும். ராகுல் காந்தி என்ன செய்தாரோ அதற்கான விளைவுகளை தற்போது அவர் அனுபவிக்கிறார்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

# என்.எல்.சி. விவகாரத்துக்கு தீர்வு காண உயர்மட்ட குழு

## அமைச்சர் தங்கம் தென்னரசு தகவல்

**சென்னை, மார்ச் 25-**

என்.எல்.சி. விவகாரத்துக்கு தீர்வு காண உயர்மட்ட குழு அமைக்கப்பட்டுள்ளதாக சட்டசபையில் அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார்.

என்.எல்.சி. நிறுவனத்திற்காக நிலம் கையகப்படுத்தப்படுதற்கு எதிர்ப்பு தெரிவித்து தொடர்ந்து போராட்டம் நடைபெற்று வருகிறது. இது குறித்து சட்டசபையில் பல்வேறு கட்சி உறுப்பினர்கள் கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்தனர். இதற்கு தொழில் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பதில் அளித்து பேசியதாவது,

என்.எல்.சி. நிறுவனத்தில் தற்போது 1711 காலி பணியிடங்கள் விரைவில் நிரப்பப்பட உள்ளன. இவற்றில் நிலம் அளித்தவர்களுக்கு கூடுதலாக 20 மதிப்பெண்கள் வழங்கப்படும் என்று என்.எல்.சி. நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஒரு ஏக்கருக்கு ரூ. 25 லட்சம் இழப்பீடு வழங்கப்படும். இது தொடர்பான பேச்சுவார்த்தை இறுதிக் கட்டத்தில் உள்ளது. இதை உறுதிசெய்ய உயர்மட்ட குழுவை முதல்வர் அமைத்துள்ளார். விவசாயிகளுக்கு பாதிப்பு இல்லாத வகையில் நடவடிக்கை எடுக்க முதல்வர் அறிவுறுத்தி உள்ளார்.

ரூ. 100 கோடி சி.எஸ்.ஆர். நிதியை கடலூர் மாவட்டத்தில் செலவு செய்ய என்.எல்.சி. நிறுவனம் ஒப்புதல் தெரிவித்துள்ளது. 60,000 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்படவில்லை. தேவைக்கு அதிகமான நிலங்களை கையகப்படுத்தும் பணியை அரசு ஒருபோதும் மேற்கொள்ளாது. இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார்.

## நகை திருட்டு வழக்கில் மேலும் ஒருவர் கைது:

# ரஜினி மகள் ஐஸ்வர்யாவிடம் விசாரிக்க போலீசார் முடிவு

**சென்னை, மார்ச் 25-**

நடிகர் ரஜினிகாந்த் மகள் ஐஸ்வர்யா வீட்டில் நகை திருட்டில் ஈடுபட்டதாக கைது செய்யப்பட்ட பணிப் பெண்ணிடமிருந்து, புகாரில் தெரிவிக்கப்பட்டதை விட அதிக நகைகள் பறிமுதல் செய்யப்பட்டதால் ஐஸ்வர்யாவிடம் விசாரிக்க காவல் துறை முடிவு செய்துள்ளது. இந்த வழக்கில் மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நடிகர் ரஜினிகாந்தின் மகள் ஐஸ்வர்யா தனது வீட்டு லாக்கரில் இருந்த 60 பவுன் நகைகள் திருடப்பட்டு விட்டதாக தேனாம்பேட்டை காவல் நிலையத்தில் கடந்த மாதம் புகார் அளித்தார். அதன்படி, காவல் நிலைய குற்றப்பிரிவு போலீசார் விசாரணை நடத்தினர்.

முதல் கட்டமாக ஐஸ்வர்யா வீட்டில் வேலை செய்து வந்த சென்னை மந்தவெளி பள்ளிவாசல் தெருவைச் சேர்ந்த ஈஸ்வரி, கார் ஓட்டுநர் திருவேற்காடு மனசுரா கார்டனைச் சேர்ந்த வெங்கடேசன் ஆகிய இருவரிடமும் போலீசார் விசாரித்தனர். இதில் ஈஸ்வரி, வெங்கடேசன் இருவரும் கூட்டு சேர்ந்து ஐஸ்வர்யா வீட்டில் நகை திருடியதை ஒப்புக் கொண்டனர்.

இதையடுத்து இருவரையும் போலீசார் கடந்த 21-ம் தேதி கைது செய்தனர். அவர்களிடமிருந்து 100 பவுன் தங்க நகைகள், 30 கிராம் வைர நகைகள், 4 கிலோ வெள்ளி பொருட்கள் மற்றும் வீட்டுப் பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டன. ஐஸ்வர்யா தனது வீட்டிலிருந்து 60 பவுன் திருடு போனதாக புகாரில் தெரிவித்த நிலையில் 100 பவுனுக்கு மேல் நகைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இது போலீஸாருக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனவே, இது தொடர்பாக ஐஸ்வர்யாவிடம் விசாரிக்க காவல் துறையினர் முடிவு செய்துள்ளனர். இந்நிலையில் இந்த வழக்கில் மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இதன்படி, திருட்டு நகைகளை வாங்கியதாக மயிலாப்பூரை சேர்ந்த வினால்க் சங்கர் நவாலி என்பரை தேனாம்பேட்டை போலீசார் கைது செய்துள்ளனர்.

## அ.தி.மு.க. பொதுச்செயலாளர் தேர்தலை எதிர்த்த வழக்கு:

# ஓ.பி.எஸ். தரப்பில் எழுத்துபூர்வ வாதங்கள் ஐகோர்ட்டில் தாக்கல்

**சென்னை, மார்ச் 25-**

அ.தி.மு.க. பொதுக்குழு மற்றும் பொதுச்செயலாளர் தேர்தலை எதிர்த்த வழக்கில் ஓ.பி.எஸ். தரப்பில் எழுத்து பூர்வ வாதங்கள் ஐகோர்ட்டில் நேற்று தாக்கல் செய்யப்பட்டன.

கடந்த ஆண்டு ஜூலை 11-ம் தேதி நடந்த அ.தி.மு.க. பொதுக்குழு கூட்டத்தில், ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் பதவிகள் கலைக்கப்பட்டன. பொதுச்செயலாளர் பதவியை மீண்டும் கொண்டு வருவது எனவும், இடைக்கால பொதுச் செயலாளராக எடப்பாடி பழனிசாமியை நியமித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மேலும், பன்னீர் செல்வம், வைத்தியலிங்கம், ஜே.சிடி.பிரபாகர் உள்ளிட்டோரை கட்சியில் இருந்து நீக்கியும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை எதிர்த்தும், அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பதவிக்கு அறிவிக்கப்பட்டுள்ள தேர்தலுக்கு தடை விதிக்கக் கோரியும் பன்னீர் செல்வம் மற்றும் அவரது ஆதரவாளர்கள் தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில், வழக்குகள் தொடரப்பட்டன.

இந்த வழக்கில் அனைத்து தரப்பு வாதங்களும் நிறைவடைந்த நிலையில், வழக்கை விசாரித்த சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி குமரேஷ் பாபு , எழுத்துபூர்வ வாதங்களை தாக்கல் செய்ய ஓ.பி.எஸ். தரப்புக்கு மார்ச் 24 காலை வரை அவகாசம் வழங்கி இந்த வழக்குகளின் இடைக்கால கோரிக்கைகள் மீதான தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் தள்ளிவைத்து உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையில், ஓ.பி.எஸ். மற்றும் அவரது ஆதரவாளர்கள் சார்பில் எழுத்துபூர்வமான வாதங்கள் வெள்ளிக்கிழமை (நேற்று) தாக்கல் செய்யப்பட்டன. இதில், கடந்த புதன்கிழமை நடைபெற்ற வாதங்களை தொகுத்து எழுத்துபூர்வ வாதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் பதவிகள் குறித்து நிலுவையில் இருக்கும் மூல வழக்கில் தான் முடிவு செய்ய முடியும் என இரு நீதிபதிகள் கொண்ட சுப்ரீம் கோர்ட் அமர்வு கூறியுள்ள நிலையில் பொதுச்செயலாளர் தேர்தல் முடிவை அறிவிப்பது அதற்கு முரணானது என எழுத்துபூர்வ வாதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் அ.தி.மு.க. பொதுக்குழு, பொதுச் செயலாளர் தேர்தலை எதிர்த்த வழக்கில் வரும் திங்கட்கிழமை தீர்ப்பு வெளியாக வாய்ப்புள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

# தமிழகத்தில் கூட்டணியில் எந்த குழப்பமும் இல்லை

## மாநிலத்தலைவர் அண்ணாமலை பேட்டி

**மதுரை, மார்ச் 25-**

தமிழகத்தில் அ.தி.மு.க., பா.ஜ.க. கூட்டணியில் எந்த வித குழப்பமில்லை என்று தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.

தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை நேற்று முன்தினம் டெல்லியில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை சந்தித்துப் பேசினார். அந்த சந்திப்பு பற்றி பல்வேறு ஊகங்கள் நிலவி வந்தன. அ.தி.மு.க.வுடனான கூட்டணியை முறித்துக் கொள்ள அண்ணாமலை அமைச்சர் அமித்ஷாவிடம் வலியுறுத்தியதாக தகவல்கள் வெளியாகின.

இந்நிலையில் நேற்று காலை மதுரை விமான நிலையத்தில் அண்ணாமலை செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது, தமிழகத்தில் அ.தி.மு.க., பா.ஜ.க. கூட்டணியில் எந்தக் குழப்பமும் இல்லை. நான் டெல்லி சென்று அமைச்சர் அமித் ஷாவை சந்தித்தது தொடர்பாக பல்வேறு செய்திகள் வெளியாகியுள்ளன. ஆனால் அமித்ஷாவுடனான எனது சந்திப்பு வழக்கமானதே.

இந்த சந்திப்பின்போது பா.ஜ.க.வின் வளர்ச்சி, கட்சிப் பணிகள் பற்றி பேசினேன். தமிழக அரசியல் நிலவரம் பற்றி பேசினேன். தமிழகத்தில் பா.ஜ.க.வை வலிமையாக்குவது குறித்து பேசினேன். தமிழகத்தில் தி.மு.க. ஆட்சி அமைந்து 20 மாதங்களுக்கு மேல் ஆகி விட்டது. ஒரு இடைத்தேர்தல் நடந்துள்ளது. தமிழகத்தின் அரசியல் களத்தில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

இந்நிலையில் நான் தமிழகத்தில் பா.ஜ.க.வின் வளர்ச்சி பற்றியே அமைச்சர் அமித்ஷாவிடம் பேசினேன். நாங்கள் தமிழகத்தில் வேகமாக வளர வேண்டும் என்ற முனைப்பில் உள்ளோம். பா.ஜ.க. மக்கள் செல்வாக்கைப் பெற விரும்புகிறது. ஆளுங்கட்சியாக வளர விரும்புகிறது. அது குறித்தே பேசினேன். மேலும் கூட்டணி விவகாரங்களில் பா.ஜ.க. மத்தியக் குழு தான் எந்த ஒரு முடிவும் எடுக்கும். ஆகையால் நான் கூட்டணி விவகாரங்கள் பற்றி ஏதும் பேசவில்லை.

நான் ஏற்கெனவே சொன்னதுபோல் எல்லாக் கட்சியினரும் அவர்கள் கட்சியே வளர வேண்டும் என்றே விருப்பம் இருக்கும். கூட்டணியில் இருந்தாலும் அவ்வாறே கட்சிகள் நினைக்கும், செயல்படும். மேலும், ஒரு கூட்டணியில் சிராய்ப்புகள், உரசல்கள் வருவது சகஜமே. மற்றபடி எங்கள் கூட்டணி ஆக்கபூர்வமான கூட்டணி. எனக்கோ, பா.ஜ.க.வுக்கோ எந்த ஒரு தனிப்பட்ட கட்சி, தலைவர் மீது கோபமில்லை. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# ராகுலின் பதவி பறிப்பில் சட்டப்படி நடவடிக்கை

## காங்கிரஸ் கட்சி அறிவிப்பு

**புதுடெல்லி, மார்ச் 25-**

ராகுல் காந்தி, எம்.பி. பதவியில் இருந்து தகுதிநீக்கம் செய்யப்பட்டதை சட்டப்படி சந்திப்போம் என்று காங்கிரஸ் மூத்த தலைவை அபிஷேக் மனு சிங்வி கூறியுள்ளார். ராகுல் காந்தி எம்.பி. பதவியில் இருந்து தகுதிநீக்கம் செய்யப்பட்டதற்கு காங்கிரஸ் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் அபிஷேக் மனு சிங்வி செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது; பொருளாதாரம், சமூகம், அரசியல், சீன எல்லை பிரச்சினை உள்ளிட்ட விவகாரங்களில் ராகுல் காந்தி உண்மையை பேசினார். இதனால், மத்திய அரசு அச்சமடைந்துள்ளது. ராகுல்காந்தியில் குரலை நெறிக்க மத்திய பாஜக அரசு புதிய வழிமுறைகளை கண்டு பிடித்துவருகிறது. நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும், வெளியேயும் பல்வேறு கருத்துக்களை தைரியமாக பேசியதற்கான விலையை ராகுல் காந்தி கொடுத்துள்ளார். கடந்த 2019ம் ஆண்டும் ஏப்ரல் மாதம் பதிவுசெய்யப்பட்ட வழக்கில் 2021 ஜூன் மாதம் ராகுல் காந்தி ஆஜரானார். அரசியலமைப்பு சட்டம்103-ன் படி ராகுல் காந்தி தகுதிநீக்கம் செய்யப்பட்டு உள்ளார். அரசியலமைப்பு சட்டத்தின்படி ஜனாதிபதி தான் ராகுல் காந்தியை தகுதி நீக்கம் செய்யமுடியும். இந்த விவகாரத்தில் சரியான வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றனவா என்கின்ற மிகப்பெரிய கேள்வி எழுந்துள்ளது. மேலும், இது தொடர்பாக தேர்தல் ஆணையத்திடம் பரிந்துரை கூட கேட்கவில்லை. சட்டத்தின் மீது எங்களுக்கு நம்பிக்கை உள்ளது. இந்த விவகாரத்தை சட்டப்படி சந்திப்போம். இவ்வாறு அவர் கூறினார்.

# ஜார்கண்ட்டில் வீடு மீது மோதிய சிறிய ரக விமானம்

**ராஞ்சி, மார்ச் 25-**

ஜார்க்கண்ட் மாநிலத்தில், ஒரு வீட்டின் சுவர் மீது சிறிய ரக விமானம் ஒன்று மோதி விபத்திற்குள்ளானது.

ஜார்க்கண்ட் மாநிலம் தன்பாத்தில், ஒரு வீட்டின் சுவர் மீது சிறிய ரக விமானம் மோதி விபத்திற்குள்ளானது. தொழில்நுட்ப கோளாறு காரணமாக ஏற்பட்ட இந்த விபத்தில், விமானத்தில் பயணித்த பைலட் மற்றும் குழந்தை காயமடைந்தனர்.

விபத்தில் சிக்கியவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், சம்பவ இடத்திற்கு வந்த போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இதனிடையே விமானம் விபத்தில் சிக்கியது தொடர்பான காட்சிகள் வெளியாகி வைரலாகி வருகிறது.

## பத்மஸ்ரீ விருது பெற்ற தமிழகத்தை சேர்ந்த

# பாம்புபிடி வீரர்கள் முதல்வர் ஸ்டாலினை சந்தித்து வாழ்த்து

**சென்னை, மார்ச் 25-**

பத்மஸ்ரீ விருது பெற்ற தமிழகத்தை சேர்ந்த பாம்பு பிடி வீரர்களான வடிவேல் கோபால், மாசி சடையன் நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

இந்தியாவின் உயரிய விருதான பத்ம விருதுகள் குடியரசு தினத்தையொட்டி 106 பேருக்கு அறிவிக்கப்பட்டது. 6 பேருக்கு பத்ம விபூஷன் விருதும், 9 பேருக்கு பத்ம பூஷண் விருதும், 91 பேருக்கு பத்மஸ்ரீ விருதும் அறிவிக்கப்பட்டது. இந்த நிலையில் பத்ம விருதுகள் வழங்கும் நிகழ்ச்சி டெல்லியில் உள்ள ராஷ்டிரபதி பவனில் கடந்த 3 நாட்களுக்கு முன் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாட்டின், இருளர் பழங்குடியினத்தைச் சேர்ந்த பாம்புபிடி வீரர்களான வடிவேல் கோபால், மாசி சடையன் ஆகியோர் பத்மஸ்ரீ விருது பெற்றனர்.

அவர்களுக்கு ஜனாதிபதி திரௌபதி முர்மு பத்மஸ்ரீ விருது வழங்கி கவுரவித்தார்.

இந்த நிலையில் பத்மஸ்ரீ விருதுகள் பெற்ற இருளர் பழங்குடியினத்தைச் சேர்ந்த பாம்புபிடி வீரர்கள் மாசி சடையன் மற்றும் வடிவேல் கோபால் ஆகியோர் தங்களது குடும்பத்தினருடன் முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று சென்னை தலைமை செயலகத்தில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

மழைத்துளி மண்ணின் உயிர்துளி

## தலைவர்கள் சொல்வதை படிங்க...



ராகுல் காந்தியை தகுதி நீக்கம் செய்தது ஜனநாயகப் படுகொலை. 2 ஆண்டுகள் தண்டனை என்று சொன்னாலும், பிணையில் வருவதற்கு ஒரு மாத கால அவகாசத்தை நீதிமன்றமே தந்திருக்கிறது. நாட்டு மக்கள் இதற்கெல்லாம் சேர்த்து மோடி அரசுக்கு தண்டனை கொடுப்பார்கள்

- வைகோ



வருகிற 2024-ம் ஆண்டு நடைபெற உள்ள பாராளுமன்ற தேர்தலில் பா.ஜ.க.வை வீழ்த்த நாடு முழுவதும் உள்ள மாநில கட்சிகள் ஒன்றிணைந்து மாற்று அணியை உருவாக்க வேண்டும். கடந்த தேர்தலின் போதும், இதுபோல் ஒரு அணியை உருவாக்க முயற்சித்தார்கள். பின்னர் அந்த கூட்டணி சிதறுண்டுபோனது.

- சீமான்



தமிழ்நாட்டிலிருந்து அரசியல் கட்சித் தலைவர்கள் அடங்கிய குழு மற்றும் மூத்த வழக்கறிஞர்கள் குழுவை அனுப்பி பிரதமரையும், சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதியையும் சந்தித்து சென்னை ஐகோர்ட்டின் அலுவல் மொழியாக தமிழை அறிவிக்க வலியுறுத்த தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- ராமதாஸ்



மத்திய அமைச்சரவையில் கிரிமினல் பின்னணி கொண்ட பா.ஜ.க. தலைவர்கள் இடம்பெற்றுள்ளனர். ஆனால், எதிர்க்கட்சி தலைவர்கள் பேசியதற்காக தகுதிநீக்கம் செய்யப்படுகின்றனர். இன்று, நமது அரசியலமைப்பு ஜனநாயகத்திற்கு புதிய தலைகுனிவு ஏற்பட்டுள்ளது.

- மம்தா பானர்ஜி

# பரமக்குடியில் நாய் தொல்லை அதிகரிப்பு: நடவடிக்கை எடுக்க கவுன்சிலர்கள் கோரிக்கை



**பரமக்குடி, மார்ச் 25-**

பரமக்குடி நகர்மன்ற கூட்டம் நகர் மன்ற தலைவர் சேது கருணாநிதி தலைமையில் நடந்தது. ஆணையாளர் திருமால் செல்வம் முன்னிலை வகித்தார். வருவாய் ஆய்வாளர் முருகன் தீர்மானங்களை வாசித்தார். அதனைத் தொடர்ந்து கேள்வி நேரத்தில் வடமலையான் (அ.தி.மு.க) 36 வது வார்டு சி.எஸ். எம். போர்டிங் சாலையில் உள்ள சமுதாய கழிப்பறை ஏற்கனவே டெண்டர் விடப்பட்டு பணிகள் முடிந்து ஒரு மாதம் தான் ஆகிறது. அதற்குள் மீண்டும் அதே பணிக்கு ரூ9 லட்சத்தில் டெண்டர் விடுவதாக நகராட்சி நிர்வாகம் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. இது சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது.

மீராஅலி (பொறியாளர்) பிரிண்டிங் தவறால் அது நடந்துள்ளது. ஜி.வி.பந்த் தெருவிற்கு பதிலாக அவ்வாறு வந்துள்ளது.

மோகன் (அ.தி.மு.க) 36 வது வார்டில் வாறுகால் அள்ளுவதே இல்லை. சுகாதார பிரிவில் கேட்டால் மாஸ் பணி நடைபெறுகிறது என்று சொல்லி ஒரே இடத்தில் அனைவரும் வேலை செய்கின்றனர். இதை அனைத்து வார்டுகளிலும் செய்ய வேண்டும்.

ஜெயராமன் (சுகாதார அலுவலர் ) : ஒவ்வொரு வார்டாக செய்து வருகிறோம்.

சதீஷ்குமார் (தி.முக):முத்தாலம்மன் கோவில் பங்குனி திருவிழா தொடங்கப்பட உள்ளது. இந்த திருவிழாவுக்கு நகராட்சி நிர்வாகம் சார்பில் சுகாதார பணி உள்பட அடிப்படை வசதிகளை செய்து தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

சேது கருணாநிதி ( தலைவர்) : பக்தர்களுக்கு வேண்டிய வசதிகள் நகராட்சி நிர்வாகம் சார்பில் செய்து கொடுக்கப்படும்.


கவிதா ( தி.மு.க) நகரில் நாய்கள் தொல்லை அதிகரித்து வருகிறது. சிறு குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரையும் விரட்டி கடிக்கிறது. தற்போது வெயில் காலம் தொடங்கி விட்டதால் நாய்கள் தொல்லை தாங்க முடியவில்லை. நாய்களை ஒழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல் மாடுகள் சாலைகளில் சுற்றித்திரிந்து ஆங்காங்கே படுத்து கொள்கிறது. இதனால் விபத்துகளும் ஏற்படுகிறது.

சேது கருணாநிதி ( தலைவர்): நாய்களை கொல்ல முடியாது. கருத்தடை தான் செய்ய முடியும். விரைவில் அதற்கான டெண்டர் விடப்பட்டு நடவடிக்கை எடுக்கப் படும்.

வடமலையான் ( அ.தி.மு.க): நகராட்சி ஆணையாளர் தேவகோட்டை நகராட்சிக்கும் பொறுப்பு வகிப்பதால் பணிகள் நடைபெறுவதில் குளறுபடி ஏற்படுகிறது.

திருமால் செல்வம் (ஆணையாளர்) பரமக்குடி நகராட்சிக்கு தான் நான் நிரந்தர ஆணையாளர். தேவகோட்டை நகராட்சிக்கு பொறுப்பு ஆணையாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளேன். ஆனாலும் பணிகள் தொய்வின்றி நடைபெற்று வருகிறது.

சேது கருணாநிதி (தலைவர்): பரமக்குடி நகராட்சிக்கு வரவேண்டிய வரிப்பாக்கிகள் ரூ.4 கோடிக்கு மேல் உள்ளது. அந்தந்த வார்டு கவுன்சிலர்கள் பகுதி மக்களிடம் சொல்லி நகராட்சிக்கு வரியை செலுத்த நடவடிக்கை எடுத்தால் நன்றாக இருக்கும். இவ்வாறு கூறினார். தொடர்ந்து கவுன்சிலர்கள் குறைகளை கோரிக்கைகளையும் தெரிவித்து பேசினர். சுகாதார அலுவலர் ஜெயராமன் நன்றி கூறினார்.



**மதுரை திருப்பாலை இ.எம்.ஜி. யாதவா பெண்கள் கலை கல்லூரியில் நடந்த தமிழ் கனவு பண்பாட்டு பரப்புரை நிகழ்ச்சியில் பல்வேறு கேள்விகளுக்கு சிறப்பாக பதிவு செய்த மாணவிகளுக்கு எழுத்தாளர் செல்லதுரை, மாநில திட்டக்குழு உறுப்பினர் நர்த்தகி நடராஜ் ஆகியோர் பாராட்டு சான்றிதழ்களை வழங்கினர். அருகில் மாவட்ட வருவாய் அலுவலர் ராஜ்குமார், கல்லூரி முதல்வர் புஷ்பலதா ஆகியோர் உள்ளனர்.**

# அருப்புக்கோட்டை முத்துமாரியம்மன் கோவிலில் திருத்தேர் வெள்ளோட்டம்

**அருப்புக்கோட்டை, மார்ச் 25-**

அருப்புக்கோட்டை ஸ்ரீ முத்து மாரியம்மன் கோவில் பொங்கல் விழா வரும் செவ்வாய் அன்று கொடியேற்றத்துடன் துவங்கி நடைபெற உள்ளது.

அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு நாளும் அம்மன் சிறப்பு அலங்காரத்தில் பொதுமக்களுக்கு அருள் பாலிப்பார்.

ஏப்ரல் 4ந் தேதி பங்குனி பொங்கல் விரதமிருந்து பக்தர்கள் கோவில் முன்பு பொங்கல் வைத்து வழிபடுவார்கள் புதன்கிழமை தீச்சட்டி அழகு குத்தியும் பக்தர்கள் நேர்த்திக்கடன் செலுத்துவர்.

வியாழக்கிழமை அதிகாலையில் விரதம் இருந்த பக்தர்கள் கோவில் முன்பு அமைக்கப்பட்ட பூக்குழியில் இறங்கி நேர்த்திக்கடனை செலுத்துவார்கள்.

அதனைத் தொடர்ந்து திருத்தேர் ஊர்வலம் நடைபெற உள்ளது. அன்று அம்மன் திருத்தேரில் நகரில் முக்கிய வீதி வழியாக சென்று பொது மக்களுக்கு அருள் பாலிப்பார்.

பங்குனி விழாவை முன்னிட்டு திருத்தேர் வீதி உலா நிகழ்ச்சி நடைபெற உள்ளது. இந்நிலையில் நேற்று காலை இந்த புதிய திருத்தேர் வெள்ளோட்டம் நடைபெற்றது. முத்து மாரியம்மன் கோவிலில் இருந்து துவங்கி பஜார் வழியாக சென்று மீண்டும் கோவிலில் வந்து வெள்ளோட்டம் நிறைவுற்றது. நிகழ்ச்சியில் அருப்புக்கோட்டை நாடார்கள் உறவின்முறை தலைவர் காமராஜ். அமுதலிங்கேஸ்வரர் கோவில் டிரஸ்டி ராஜரத்தினம் நிர்வாகிகள் மனோகரன் ரவி முத்துக்குமார் ஜெயபாண்டி மற்றும் உறவின் முறை நிர்வாகிகள் பக்தர்கள் திரளாக கலந்து கொண்டனர்.



# சட்ட விழிப்புணர்வு இயக்கம் மூன்றாம் ஆண்டு விழா



**ஒட்டன்சத்திரம், மார்ச் 25**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் சட்ட விழிப்புணர்வு இயக்கம் மூன்றாம் ஆண்டு துவக்கவிழா நிறுவன தலைவர் ஜார்ஜ் பீஜிலின் தலைமையில் கொண்டாடப்பட்டது நிகழ்வின் விழிப்புணர் இயக்கத்தின் செயல்பாடுகள் இயக்க வளர்ச்சி திட்ட அறிக்கை உள்ளிட்டவை குறித்தும், மூத்த குடிமக்கள் பாதுகாப்பு மற்றும் தற்காப்பு கலைகள் குறித்து செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. நிகழ்வில் செயலாளர்கள் பிரகாசமணி , ராஜா உள்ளிட்ட தமிழகத்தின் பல் வேறு பகுதிகளில் இருந்து நிர்வாகிகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# பணிக்கொடை வழங்க வலியுறுத்தி வாலிநோக்கம் உப்பு நிறுவனத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

**கடலாடி, மார்ச் 25-**

தமிழ்நாடு அரசு உப்பு நிறுவனத்தில் பணியாற்றக்கூடிய தொழிலாளர்களுக்கு பணிக்கொடை சட்டப்படி 15 நாள் பணிக்கொடை வழங்க வேண்டும் என வலியுறுத்தி மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இராமநாதபுரம் மாவட்டம் வாலிநோக்கத்தில் இயங்குகிற தமிழ்நாடு அரசு உப்பு நிறுவனம் 1975 ஆம் ஆண்டு திமுக அரசு வேலைவாய்ப்பை வழங்குவதற்காக உருவாக்கப்பட்ட நிறுவனம் ஆகும். துவங்கப்படுகிற போது பருவ கால தொழிற்சாலை என்பதாக காரணம் காட்டி பணிபுரியும் தொழிலாளர்களுக்கு 7 நாள் மட்டுமே பணிக்கொடை என்பது வழங்கப்பட்டு வந்தது. தொழில் சங்கம் சார்பில் 15 நாட்கள் பனிக்கொடை சட்டத்தின் படி பணிக்கொடை கணக்கிட்டு வழங்க வேண்டும் என தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர் .

சர்க்கரை ஆலையும் பருவகால தொழிற்சாலைதான். அங்கு பணிபுரியும் தொழிலாளர்களுக்கு 15 நாள் பணிக்கொடை வழங்கும் அரசாணை நகலை முன்னுதாரணமாக கொண்டு அரசு உப்பு நிறுவன தொழிலாளர்களுக்கும் 15 நாள் பணிக்கொடை வழங்க வேண்டும் என வலியுறுத்தி நேற்று சங்கத் தலைவர் கே.பச்சம்மாள் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் கோரிக்கைகள் விளக்கி சிஐடியு மாவட்ட செயலாளர் எம்.சிவாஜி - அரசு உப்பு நிறுவன தொழிற்சங்க செயலாளர் வி. குமரவடிவேல்- பொருளாளர் எஸ்.முருகேசன் - நிர்வாகிகள் காட்டுராஜா- முருகவேல்-அற்புதமணி வடிவேல் உட்பட 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் பேசிய சிஐடியு மாவட்ட செயலாளர் மே மாத இறுதிக்குள் 15 நாள் பணிக்கொடை என்பதை அரசு உப்பு நிறுவன நிர்வாகம் ஏற்றுக் கொண்டு உத்தரவு வழங்கவில்லை என்றால் ஜூன் மாதம் முதல் வாரத்தில் வேலை நிறுத்தம் செய்து- 500 தொழிலாளர்களுடன் சென்னை தலைமை அலுவலகம் முன்பு முற்றுகைப் போராட்டம் நடத்துவது என அறிவித்தார்.

# பெரியகுளம் நகர்மன்ற கூட்டம் தேதி குறிப்பிடாமல் ஒத்திவைப்பு

**தேனி மார்ச் 25**

குடிநீர் தட்டுப்பாடு குறித்து கவுன்சிலர்கள் எழுப்பிய கேள்வியை தொடர்ந்து பெரியகுளம் நகர்மன்ற கூட்டம் தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டது.

பெரியகுளம் நகர்மன்ற கூட்டம் தலைவர் சுமிதாசிவக்குமார் தலைமையில் நேற்று துவங்கியது. கூட்டம் துவங்கியதும் நகர்மன்ற குழு தலைவர் ஓ.சண்முகசுந்தரம் மற்றும் அ.தி.மு.க .கவுன்சிலர்கள் பெரியகுளத்தில் முறைகேடாக மீன்பிடிப்பதற்காக சோத்துப்பாறை அணையிலிருந்து தண்ணீரை திறந்துவிட்டு செயற்கையான குடிநீர் பஞ்சத்தை உருவாக்கியதை கண்டித்து கோஷங்களை எழுப்பி வெளிநடப்பு செய்தனர். அதனை தொடர்ந்து மற்ற கவுன்சிலர்களும் ஆணையாளரிடம் குடிநீர் தட்டுப்பாடு குறித்து கேள்வி எழுப்பினர். இதனால் ஆணையாளர் மற்றும் அதிகாரிகள் நகர்மன்ற கூட்டத்தை விட்டு வெளியேறினர். அதனை தொடர்ந்து கவுன்சிலர்கள் ஆணையாளரை கண்டித்து கண்டன தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றினர். இதனால் இப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. அதை தொடர்ந்து நகர்மன்ற கூட்டம் தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டது.

# பெண் கொலை வழக்கில் இருவருக்கு ஆயுள்

**விருதுநகர், மார்ச் 25-**

ராஜபாளையம் அருகே பெண்ணை கொலை செய்த நாகராஜ்(26), அழகுபட்டு(36) ஆகியோருக்கு ஆயுள் தண்டனை விதித்து விரைவு மகளிர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

ராஜபாளையம் இ.எஸ்.ஐ., காலனியை சேர்ந்தவர் ரமணி (38). இவர் வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்து வந்தார். இவரிடம் அதே பகுதியை சேர்ந்த சங்கரசுப்பிரமணியன் (30), அழகுபட்டு(36) ஆகியோர் கடன் வாங்கி இருந்தனர். இந்நிலையில் சங்கரசுப்பிரமணியன் பணத்தை திருப்பி தராததால் அவரது வீட்டில் இருந்த பொருட்களை ரமணி எடுத்து சென்றார். இதையெடுத்து இவர் கடந்த 2014-ம் ஆண்டு அக்டோபர் 7-ம் தேதி சங்கரசுப்பிரமணியன், அழகுபட்டு, பட்டமுத்து, நாகராஜ் ஆகியோர் ரமணியை கத்தியால் குத்தி கொலை செய்தனர். இதுகுறித்து ராஜபாளையம் தெற்கு போலீஸார் வழக்கு பதிவு செய்து நான்கு பேரையும் கைது செய்தனர். வழக்கு விசாரணை ஸ்ரீவில்லிபுத்தூர் மாவட்ட விரைவு மகளிர் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. வழக்கு விசாரணையின் போது சங்கரசுப்பிரமணியம், பட்டமுத்து ஆகியோர் உயிரிழந்து விட்டனர். இந்த வழக்கில் நாகராஜ், அழகுபட்டு ஆகிய இருவருக்கும் ஆயுள் தண்டனை மற்றும் தலா ரூ.6 ஆயிரம் அபராதம் விதித்து நீதிபதி பகவதி அம்மாள் தீர்ப்பளித்தார்.

# ஸ்ரீவில்லி.யில் கலசலிங்கம் பல்கலை. சார்பில் குழந்தைகள் துஷ்பிரயோகம் குறித்த பேரணி

**விருதுநகர், மார்ச் 25-**

கிருஷ்ணன்கோவில் கலசலிங்கம் பல்கலைக்கழகம் சார்பில் இளம் செஞ்சிலுவைச் சங்கத்தின் சார்பில் குழந்தைகள் துஷ்பிரயோகம் குறித்த விழிப்புணர்வு ஊர்வலம் ஸ்ரீவில்லிபுத்தூரில் நடைபெற்றது.பல்கலைத் துணை தலைவர் சசியானந்த் ஊர்வத்தினை துவக்கி வைத்தார். துணைவேந்தர் நாராயணன் பதிவாளர் வாசுதேவன் முன்னிலை வகித்தனர் .மாணவர் நலன் இயக்குனர் முத்து கண்ணன் அனைவரையும் வரவேற்று பேசினார். குழந்தைகள் மன ரீதியாகவும், உடல் ரீதியாகவும் துன்புறுத்தப்படுவதையும் அவற்றிலிருந்து பாதுகாப்பதற்கு மீட்பதற்கும் நல்ல குடிமக்களாக வளர்ப்பதற்கும் பெற்றோரும், சமுதாயமும் எவ்வாறு ஒத்துழைக்க வேண்டும் என மாணவர்கள் விழிப்புணர்வு பிரச்சாரம் செய்தனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை இளம் செஞ்சிலுவைச் சங்க ஒருங்கிணைப்பாளர் கலசுராமன் செய்திருந்தார். ஸ்ரீவில்லிபுத்தூரில் நடைபெற்ற விழிப்புணர்வு ஊர்வலத்தில் கல்லூரி மாணவ, மாணவிகள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

# ராகுலுக்கு சிறை தண்டனை : திருமங்கலத்தில் காங்கிரசார் ஆர்ப்பாட்டம் – சாலை மறியல்



**திருமங்கலம், மார்ச் 25-**

மதுரை மாவட்டம் திருமங்கலம் நகரில் ராகுல் காந்திக்கு 2 ஆண்டு சிறை தண்டனை விதிக்கப் பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து மதுரை தெற்கு மாவட்ட காங்கிரஸ் சார்பில் மாவட்டத் தலைவர் அம்மாபட்டி எம்.பாண்டியன் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அப்போது காங்கிரஸ் கட்சியினர் திடீரென்று சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டதால் அங்கு பரபரப்பான சூழல் ஏற்பட்டது.

காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி, பிரதமர் மோடி தொடர்பாக 2019-ல் பேசியது குறித்த அவதூறு வழக்கு சூரத் நீதிமன்றத்தில் நடைப்பெற்று வந்தது. இந்த வழக்கில் ராகுல் காந்தி 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்தது.அதே சமயத்தில் ராகுல்காந்திக்கு நீதிமன்றம் ஜாமீனும் கொடுத்தது. இந்த நிலையில் ராகுல் காந்திக்கு வழங்கப்பட்ட 2 ஆண்டு சிறை தண்டனையை எதிர்த்து நாடு முழுவதும் காங்கிரஸ் கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.இதன் ஒரு பகுதியாக மதுரை மாவட்டம் திருமங்கலம் நகர் ராஜாஜி சிலை முன்பாக மதுரை தெற்கு மாவட்ட காங்கிரஸ் கட்சியினர் நூற்றுக்கணக்கானோர் மதுரை தெற்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் அம்மாபட்டி எம்.பாண்டியன் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ராகுல் காந்தி மீது பழி வாங்கும் போக்கை மேற்கொண்டுள்ள பிரதமர் மோடியை கண்டித்து கண்டன முழக்கங்களை எழுப்பினர்.இதனிடையே ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்த காங்கிரஸ் கட்சியினர் மாவட்டத் தலைவர் அம்மாபட்டி எம். பாண்டியன் தலைமையில் திடீரென மதுரை - திருமங்கலம் சாலையில் அமர்ந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அந்த பகுதியில் சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப் பட்டது. இது பற்றி தகவல் அறிந்து விரைந்து வந்த டவுன் போலீசார் மறியலில் ஈடுபட்டவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி போராட்டத்தை கைவிடச் செய்தனர்.

இந்நிகழ்வுகளில் திருமங்கலம் நகர காங்கிரஸ் கமிட்டி தலைவர் கரிசல்பட்டி எஸ்.சௌந்தரபாண்டி மாநில பொதுச் செயலாளர் மகேந்திரன், மாநில பொதுக் குழு உறுப்பினர் பழனி குமார், மாநில நிர்வாகிகள் ராமசாமி, சுப்பிர மணியன், ராஜா பிரசாந்த், ஈஸ்வர மூர்த்தி, விஜயதீபன், காசி, வட்டார தலைவர்கள் முருகேசன், தளபதிசேகர், பாண்டியன், வீரபத்திரன், சங்கன், காசிநாதன், மாவட்ட மகளிர் அணி தலைவர் பிரவீணா, நகர் துணைத் தலைவர் சரவணன், நகர் செயலாளர் ராஜா தேசிங்கு,கவுன்சிலர் அமுதா சரவணன் கட்சி நிர்வாகிகள் பொன் மகாலிங்கம், தாமு, நாகேஸ்வரன், சரவணபவன், காளியப்பன், பெருமாள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்




**தேனி வடபுதுப்பட்டி நாடார் சரஸ்வதி கலை அறிவியல் கல்லூரியில் நடந்த தமிழ் கனவு பண்பாட்டு பரப்புரை நிகழ்ச்சியில் கலெக்டர் ஷஜீவனா, சிறப்பாக கேள்வி கேட்ட மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டு சான்றிதழ் மற்றும் புத்தகங்களை பரிசாக வழங்கினார். அருகில் பேராசிரியர் அருணன், மருத்துவர் யாழினி, கல்லூரி முதல்வர் சித்ரா மற்றும் வீரபாண்டி அரசு கல்லூரி முதல்வர் கவுசல்யா ஆகியோர் உள்ளனர்.**

# சாணார்பட்டி அருகே பழங்கால கோவில் குதிரை, கல்வெட்டு சிலைகள் கண்டுபிடிப்பு



**நத்தம், மார்ச் 25-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் தொகுதிக்குட்பட்ட சாணார்பட்டி அருகே செங்குறிச்சி பகுதியில் திண்டுக்கல்லை சேர்ந்த வரலாற்று ஆட்வாளர்கள் ஆய்வு மேற்கொண்டனர். அப்போது செங்குறிச்சியில் பழங்கால கோவில் குதிரை, கல்வெட்டு சிலைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவைகள் 18- ஆம் நூற்றாண்டில் முடிமலை ஆண்டவர் என்னும் சிவன் கோவில் கட்டப்பட்டுள்ளது. இந்த கோவில் கருங்கல்லால் அஸ்திவாரம் போடப்பட்டு செங்கல், சுண்ணாம்பு, ஆகிய வற்றை கொண்டு விமானம் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் கோவிலுக்கு வெளியே அழகிய வேலைப்பாடுகளுடன் குதிரை சிலை அமைக்கப்பட்டுள்ளது.

காவல் தெய்வங்களான ஆண், பெண்பூத கணங்கள், சிங்கத்தின் தலை கொண்ட மனித உடல், அன்னப்பறவை, தலைப்பாகையுடன் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. குதிரை சிலையின் கீழே கல்வெட்டு ஒன்று உள்ளது. இதில் 1888-ம் ஆண்டு முடிமலை ஆண்டவருக்கு கோவில் கட்டியதாகவும் தகவல் உள்ளது. இந்த கிராம மக்கள் நலமுடன் வாழ மடுவூர் ஜமீன்தார் முத்துவீர வெங்கடசாமி நாயக்கர் வைத்த கல்வெட்டும் உள்ளது என வரலாற்று ஆய்வாளர் விஸ்வநாததாஸ் தலைமையினான குழுவினர் தெரிவித்துள்ளனர்.

# ராகுலுக்கு தண்டனை: ஒட்டன்சத்திரத்தில் காங்கிரசார் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்




**ஒட்டன்சத்திரம், மார்ச் 25-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் நகர காங்கிரஸ் கட்சியின் சார்பில் ராகுல் காந்தி எம். பி.க்கு சிறை தண்டனை விதிக்கப்பட்டதையடுத்து ஒன்றிய அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. நகரத் தலைவர் காளிமுத்து வரவேற்புரை யற்றினார். மாநில செயற்குழு உறுப்பினர் சிவ சக்தி வேல், மாவட்டச் செயலாளர் , ரகுமான் சேட், மாவட்ட துணை தலைவர் எத்திராஜ் முன்னிலை வகித்தனர். ஆர்ப்பாட்டத்தில் ஒன்றிய அரசை கண்டித்துகண்டன கோஷங்கள் எழுப்பப் பட்டது .

ஆர்ப்பாட்டத்தில் , செல்லமுத்து ,துரைசாமி, கருப்பு சாமி, சிந்தை வேலுச்சாமி, ஊராட்சி மன்ற துணைத் தலைவர் சுரேஷ்குமார், வெங்கடேசன், ஆறுமுகம், சக்திவேல், அய்யாவு, ஜாகிர் உசேன் மாநில பேச்சாளர் சிந்தை கருப்புசாமி உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர். முடிவில் வட்டார தலைவர் அசரப்அலி நன்றி கூறினார்

# கிருஷ்ணகிரி மாவட்டத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பாக தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக்கண்காட்சி

## ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்



**கிருஷ்ணகிரி,மார்ச்.25-**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பாக (24.3.2023) அமைக்கப்பட்டிருந்த தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சி பொதுமக்கள் பார்வையிட்டனர்.

இப்புகைப்பட கண்காட்சியில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைத்த புதிய திட்டங்கள் மற்றும் அரசு நலதிட்ட உதவிகள் வழங்கியது குறித்த புகைப்படங்கள் அமைக்கப் பட்டிருந்தது.

மேலும், தமிழ்நாடு அரசின் பல்வேறு சிறப்பு திட்டங்களான, மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் திட்டம், இல்லம் தேடிக் கல்வி, கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள மலை கிராமங்களுக்கு 108 ஆம்புலன்ஸ் சேவை வழங்கியது, கலைஞரின் வருமுன் காப்போம் மருத்துவ முகாம், பள்ளி கல்லூரி மாணவ மாணவியர்கள் மற்றும் இளைஞர்;களுக்கான திறன் மேம்பாட்டுத் திட்டம், முதலமைச்சரின் ஊட்டம் தரும் காய்கறித்தோட்டம் மற்றும் மாடித் தோட்;டம் அமைக்க காய்கறி விதைகள் வழங்குதல், விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் கருவிகள் வழங்குதல், விவசாயிகளுக்கு 1 இலட்சம் மின் இணைப்பு வழங்கும் திட்டம், முதலமைச்சரின் காலை உணவு திட்டம், புதுமைப் பெண் திட்டம், மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல், பள்ளி மாணவர்களுக்கு வானவில் திட்டம், மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு தொழில் சார் கடனுதவிகள் வழங்குதல், மீண்டும் மஞ்சப்பை, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை திறப்பு விழா, இலங்கை தமிழர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல், சர்வதேச மலர் ஏல மையம், அர்ச்சகர்கள் மற்றும் கோவில் பூசாரிகளுக்கு மாதாந்திர உதவித்தொகை வழங்கும் திட்டம், புதிய தொழில் புரிந்துணர்வு ஒப்பந்தம், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம், எண்ணும் எழுத்தும் திட்டம் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் புகைப்படங்கள்,

மேலும், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் மற்றும் பிற துறை அமைச்சர் பெருமக்கள் கலந்துகொண்ட நிகழ்ச்சிகளின் புகைப்படங்கள் மற்றும் கலெக்டர்; நலத்திட்ட உதவிகள் வழங்கிய புகைப்படங்கள் உள்ளிட்ட 100 -க்கும் மேற்பட்ட புகைப்படங்கள் இடம்பெற்றிருந்தது. இப்புகைப்படக்கண்காட்சியை 500 மேற்பட்ட பொதுமக்கள் பார்வையிட்டனர்.

# ஓசூரில் மஞ்சப்பை திட்டம்: மேயர் துவக்கி வைத்தார்



**ஒசூர்,மார்ச்.25-**

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் மாநகராட்சியில் தினந்தோறும் அதிகளவில் பிளாஸ்டிக் குப்பைகள் சேகரிக்கப் படுவதால் அவற்றின் பயன்பாட்டை குறைக்கும் வகையில் தமிழக முதல்வர் ஸ்டாலின் ஏற்கனவே அறிவித்துள்ள "மீண்டும் மஞ்சப்பை" என்ற திட்டத்தை மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாகவும், மக்கள் மஞ்சப்பையை பயன்படுத்த இலவசமாக மஞ்சப்பைகள் வழங்கும் நிகழ்ச்சி நேற்று நடந்தது. ஓசூர் உழவர் சந்தையில் 10 ரூபாய்க்கு மஞ்சப்பை வழங்கும் இயந்திர பயன்பாட்டை மாநகராட்சி மேயர் சத்யா துவக்கி வைத்தார். அப்போது சுற்றுச்சூழல் பொறியாளர் ரங்கராஜன், துணை மேயர் ஆனந்தய்யா, பொது சுகாதார குழு தலைவர் மாதேஸ்வரன், மண்டல தலைவர் ரவி, வரி விதிப்பு குழு தலைவர் சென்னீரப்பா, மாநகராட்சி செயற்பொறியாளர் ராஜேந்திரன், பகுதி செயலாளர் ராமு மாமன்ற உறுப்பினர் மோசின் தாஜ் நிசார், மல்லிகா, தேவி, திமுக நிர்வாகிகள் மகேஷ் பாபு,குமார், மணி, பாபு, உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# உலக காசநோய் தினத்தை முன்னிட்டு, காசநோய் ஒழிப்பு உறுதிமொழி ஏற்பு - காசநோய் விழிப்புணர்வு பேரணி

## கலெக்டர் கி.சாந்தி தொடங்கி வைத்தார்



**தருமபுரி,மார்ச்.25-**

உலக காசநோய் தினத்தை முன்னிட்டு, மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் காசநோய் ஒழிப்பு உறுதிமொழி ஏற்பு, காசநோய் விழிப்புணர்வு பேரணியினை கலெக்டர் கி.சாந்தி (24.03.2023) கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள்.

காசநோய் என்பது காற்றின் மூலம் பரவக்கூடிய ஒரு வகை தொற்றுநோய் ஆகும். இந்நோய்யினை பரப்பும் கிருமியை மைக்கோ பாக்டீரியம் டியூபர்குலோசிஸ் என்று அழைப்பர். இக்கிருமியினை இராபர்ட் கோச் என்ற விஞ்ஞானி 1882 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24 ஆம் நாள் இவ்வுலகிற்கு அறிவித்தார். அந்நாளையே ஒவ்வொரு ஆண்டும் உலக காசநோய் தினமாக அனுசரிக்கப்படுகிறது. இதன் ஒருபகுதியாக, இன்றைய தினம் கலெக்டர் கி.சாந்தி முன்னிலையில் காசநோய் ஒழிப்பு உறுதிமொழியான "இரண்டு வாரங்களுக்கு மேல் இருமல், மாலை நேரக் காய்ச்சல், பசியின்மை, எடைக் குறைதல், நெஞ்சு வலி, சளியில் இரத்தம் வருதல் ஆகியவை நுரையீரல் காசநோயின் அறிகுறிகள் என்பதை நன்கு அறிவேன். இரண்டு முறை சளிப் பரிசோதனை மற்றும் நுண்கதிர் நெஞ்சுப்படம் (Chest X – Ray) பரிசோதனை மூலம் காசநோயை கண்டுப்பிடிக்கலாம் என்பதை நன்கு அறிவேன். 6 முதல் 20 மாதம் வரை சிகிச்சை எடுத்தால் காசநோயை முற்றிலும் குணப்படுத்தலாம் என்பதை நன்கு அறிவேன். மேற்கூறிய வசதிகள் அனைத்தும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவ மனைகள், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகள், மற்றும் மாவட்ட காசநோய் மையத்திலும் இலவசமாக கிடைக்கும் என்பதை நன்கு அறிவேன். காசநோயாளிகள் இருமல் மற்றும் தும்மல் வரும்போது கைகுட்டையால் வாய் மற்றும் மூக்கை நன்றாக மூடிக்கொண்டால் காசநோய் பரவுவதை தடுக்கலாம் என்பதை நன்கு அறிவேன். மேலும் நான் அறிந்தவற்றை, என்னை சார்ந்த அனைவருக்கும தெரியப்படுத்தி காசநோய் இல்லா தருமபுரி மாவட்டம், காசநோய் இல்லா தமிழகத்தை 2025ம் ஆண்டுக்குள் உருவாக்க உறுதுணையாக இருப்பேன் என்று உளமாற உறுதியளிக்கிறேன்" என்ற உறுதிமொழியினை வாசிக்க கல்லூரி மாணவ, மாணவியர்கள், மருத்துவர்கள், அரசு துறை அலுவலர்கள் பின்தொடர்ந்து வாசித்து உறுதிமொழியினை ஏற்றுக்கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து, காசநோய் விழிப்புணர்வு பேரணியினை கலெக்டர் கி.சாந்தி கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள். இந்த பேரணியானது மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் தொடங்கி பாரதிபுரம் வரை சென்றடைந்தது. இதில் சுமார் 50க்கு மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் பங்கேற்றனர். இந்நிகழ்ச்சியில் அரசு தருமபுரி மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு. க.அமுதவல்லி, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இணை இயக்குநர் மரு.ம.சாந்தி, துணை இயக்குநர் சுகாதார பணிகள் மரு.செளண்டம்மாள், துணை இயக்குநர் (தொழுநோய்) மரு.புவனேஷ்வரி, துணை இயக்குநர் (காசநோய்) மரு.ராஜ்குமார், மருத்துவ அலுவலர் மரு.ராஜேஷ்கண்ணா, தேசிய நல வாழ்வு ஒருங்கிணைப்பாளர் மரு.பாலாஜி உட்பட தொடர்புடைய மருத்துவர்கள், சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள், கல்லூரி மாணவ, மாணவியர்கள் கலந்துகொண்டனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
17-A/2, Meyyanur Road,
Salem - 636 004.
Ph: 0427- 2334165
E-Mail: salemedi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2001/4003
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# பழைய பென்சன் திட்டத்தை நிறைவேற்ற கோரி ஜாக்டோ ஜியோ மனிதசங்கிலி போராட்டம்



**தருமபுரி,மார்ச்.25-**


பழைய பென்சன் திட்டத்தை நிறைவேற்ற கோரி ஜாக்டோ - ஜியோ சார்பில் தருமபுரி மாவட்ட கலெக்டர் அலுவலகம் அருகில் மனித சங்கிலி போராட்டம் நடைபெற்றது. பழைய பென்சன் திட்டத்தை உடனடியாக அமல்படுத்த வேண்டும். முடக்கப்பட்ட அகவிலைப்படி, காலவரையின்றி முடக்கி வைக்கப்பட்டுள்ள சரண்டர் ஆகியவற்றை உடனடியாக வழங்க வேண்டும். இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் முதுநிலை ஆசிரியர்களின் ஊதிய முரண்பாடுகளை களைய வேண்டும். தொகுப்பூதியம், சிறப்பு காலமுறை ஊதியம் மற்றும் தினக்கூலியில் பணிபுரியும் ஆசிரியர்கள், சத்துணவு ஊழியர்கள், அங்கன்வாடி ஊழியர்கள், எம்ஆர்பி செவிலியர்கள், கணினி இயக்குபவர்கள், வருவாய் கிராம உதவியாளர்கள், ஊர்புற நூலகர்கள்,வனப்பாதுகாவலர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் காலமுறை ஊதியம் வழங்க வேண்டும்.

அரசு அலுவலகங்களில் உள்ள சுமார் 6-லட்சம் காலிப்பணியிடங்களை உடனடியாக நிரப்பிட வேண்டும். உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தினர். போராட்டத்திற்கு ஜாக்டோ ஜியோ ஒருங்கிணைப்பாளர் எம்.சுருளிநாதன் தலைமை வகித்தார்.

ஜாக்டோ ஜியோ மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் கொளரன் ராசாஆனந்த் நதிகாப்பாளர் கே.புகழேந்தி, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில துணைத்தலைவர் கோ.பழனியம்மாள் மாவட்ட செயலாளர் ஏ.சேகர் மகளிர் அணி துணைக்குழு அமைப்பாளர் பி.எஸ்.இளவேணில் ,தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்க மாவட்ட தலைவர் சி.காவேரி வேளாண்மைத்துறை அமைச்சுபணியாளர் சங்க மாவட்ட தலைவர் ஜெயவேல்,ஊரக வளர்ச்சி துறை அலுவலர் சங்க மாவட்ட செயலாளர் பா.சங்கர் தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க மாவட்ட செயலாளர் பொன்.தமிழ்மணி, தமிழ்நாடு உயர்நிலை மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் கழக மாவட்ட தலைவர் துரைராஜ் , தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்ட செயலாளர் எஸ்.கேசவன் தமிழ்நாடு முதுநிலை ஆசிரியர் கழக மாவட்ட தலைவர் ஆர்.சக்திவேல் ஆகியோர் கோரிக்கைகளை விளக்கி பேசினர்.

# காசநோய் தடுப்பு பணிகளில் சிறப்பாக பணியாற்றிய மருத்துவ பணியாளர்கள்

## கலெக்டர் ஸ்ரேயா பி.சிங் கேடயம் வழங்கினார்



**நாமக்கல்,மார்ச்.25-**


நாமக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் (24.03.2023) உலக காசநோய் தினத்தை முன்னிட்டு, காசநோய் தடுப்பு பணிகளில் சிறப்பாக பணியாற்றிய மருத்துவ பணியாளர்களை பாராட்டி, கலெக்டர் ஸ்ரேயா பி.சிங் கேடயம் வழங்கினார். உலகம் முழுவதும் வாழும் மக்களிடையே காசநோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் சர்வதேச காச நோய் தினம் ஆண்டு தோறும் மார்ச் 24 ஆம் தேதி கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அதனைத்தொடர்ந்து நாமக்கல் மாவட்டத்தில் உலக காசநோய் தினத்தை முன்னிட்டு, பல்வேறு விழிப்புணர்வு மேற்கொள்ளப்பட்டது.

2021 ஆம் ஆண்டில் 1 லட்சம் பேருக்கு 1,066 நபர்களுக்கு சளிப் பரிசோதனை என்ற நிலையில் இருந்ததை கடந்த ஆண்டு 1 லட்சம் பேருக்கு 2773 பேருக்கு சளிப் பரிசோதனை அதிகப்படுத்தப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டு 3250 நபர்களுக்கு பரிசோதனை மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் நாமக்கல் மாவட்டத்தில் காசநோயிலிருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 75 சதவீதத்திலிருந்து 82 சதவீதமாக உயர்ந்துள்ளது. நடப்பாண்டில் 90 சதவீதமாக இலக்கினை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதே போல் இறப்பு சதவீதம் 9 இல் இருந்து 8 ஆக குறைந்துள்ளது. வரும் ஆண்டில் 6 சதவீதத்திற்கு கீழ் கொண்டுவர இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வரும் ஏப்ரல் 1 ஆம் தேதி முதல் காசநோயால் பாதிக்கப்பட்டவர்களின் தொடர்பில் இருந்த அனைவருக்கும் காசநோய் தடுப்பு மாத்திரை (3HP) வழங்கப்பட உள்ளது.

அதனைத்தொடர்ந்து உலக காசநோய் தினத்தை முன்னிட்டு, கலெக்டர் ஸ்ரேயா பி.சிங் காசநோய் விளக்க கையேடு மற்றும் காசநோய் குறும்படத்தினை வெளியிட்டார். மேலும் காசநோய் தடுப்பு பணிகளில் சிறப்பாக பணியாற்றிய அரசு மருத்துவமனை, அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் சிறப்பாக பணியாற்றிய தனியார் மருத்துவ மனைகளுக்கு கேடயம் வழங்கி பாராட்டினார். மேலும் சிறப்பாக பணியாற்றிய தன்னார்வலர்களுக்கும், பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு கலெக்டர் பரிசுகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சிகளில் நாமக்கல் அரசு மருத்துவ கல்லூரி முதல்வர் மரு.சாந்தா அருள்மொழி, இணை இயக்குநர் மருத்துவப்பணிகள் மரு.ராஜ்மோகன், துணை இயக்குநர் காசநோய் மரு.இர.வாசுதேவன், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.பிரபாகரன், துணை இயக்குநர் தொழுநோய் மரு.ஜெயந்தினி உட்பட மாணிக்கம்பாளையம் அரசு பல்நோக்கு சுகாதார பணியாளர் பயிற்சி பள்ளி மாணவிகள், அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தேசிய காசநோய் ஒழிப்பு திட்டம் குறித்து ஆலோசனை



**திருவள்ளூர்,மார்ச்,25.**

திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியம், ஈக்காடு துணை சுகாதார நிலையத்தில் உலக காசநோய் தினத்தை முன்னிட்டு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறையின் தேசிய காசநோய் ஒழிப்பு திட்டம் சார்பாக நடைபெற்ற விழாவில் மாவட்ட கலெக்டர் ஆல்பி ஜான் வர்கீஸ் தலைமையுரையாற்றி ஆலோசனைகள் வழங்கினார்.இந்நிகழ்ச்சியில் துணை இயக்குநர்கள் மரு.அ.லட்சுமி முரளி (காசநோய்), ஜவஹர்லால் (சுகாதாரப்பணிகள்), மரு.வசந்தி (தொழுநோய்), திருவள்ளூர் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் ஜெயசீலி ஜெயபாலன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மருத்துவர்கள், செவிலியர்கள், பொதுமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

# காசநோய் இல்லா சேலம் மாவட்டத்தை அனைவரும் ஒன்றிணைந்து உருவாக்க வேண்டும்

## மாவட்ட வருவாய் அலுவலர் பெ.மேனகா வேண்டுகோள்



**சேலம்,மார்ச்.25-**

உலக காசநோய் தினத்தை முன்னிட்டு, சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உலக காசநோய் தின விழா மாவட்ட வருவாய் அலுவலர் மரு. பெ.மேனகா தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் மாவட்ட வருவாய் அலுவலர் பேசியதாவது.

ஆண்டுதோறும் மார்ச் 24-ம் தேதி உலக காசநோய் தினமாக கடைபிடிக்கப் பட்டு வருகிறது. அந்த வகையில் இன்றைய தினம் சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உலக காசநோய் தின விழா நடைபெற்றது. இவ்விழாவில் காசநோய் தொற்றாளர்களுக்கு ஊட்டச்சத்து உணவு பொருட்களும், இத்திட்டத்தில் சிறப்பாக பணியாற்றிய அரசு மற்றும் தனியார் மருத்துவர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் கொடையாளர்களை பாராட்டி சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்தில் காசநோயாளிகளை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளிக்கும் பொருட்டு அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை, அரசு மருத்துவமனை ஆத்தூர். மேட்டுர், ஓமலூர், சங்ககிரி மற்றும் எடப்பாடி ஆகிய இடங்களில் சிறப்பு படுக்கை வசதிகள் செயல்பட்டு வருகிறது.

உடலில் எதிர்ப்பு சக்தி குறைவாக உள்ள நபர்களுக்கு காசநோய் வருவதற்கான வாய்ப்புகள் மிக அதிகம் எனவே காசநோய்க்கான அறிகுறிகள் இருந்தால் உடனே சளி பரிசோதனை செய்ய வேண்டும். காசநோய்க்கான பரிசோதனை, ஆலோசனை மற்றும் சிகிச்சைகள் அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. தனியார் துறையில் சிகிச்சை பெறும் காசநோயாளிகளின் விவரத்தினை NIKSHAY இணையத்தில் பதிவு செய்ய வேண்டுமென்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. காசநோயாளிகள் அவர்களது பொருளாதார இழப்பை ஈடு செய்யும் வகையிலும், ஊட்டச்சத்து உணவுகள் எடுத்துக் கொள்ள உதவும் வகையிலும் அனைத்து காசநோயாளிகளுக்கும் மாதம் ரூபாய்.500/- வீதம் சிகிச்சை முடியும் வரை NIKSHAY POSHAN YOJANA திட்டத்தின் மூலம் நேரடியாக நோயாளிகளின் வங்கி கணக்கில் செலுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அரசால் மேற்கொள்ளப்பட்டுவரும் காசநோய் தடுப்பு நடவடிக்கைகளுக்கு அனைவரும் முழு ஒத்துழைப்பு வழங்கி ஒன்றிணைந்து காசநோய் இல்லா சேலம் மாவட்டத்தை உருவாக்கிட வேண்டும். இவ்வாறு மாவட்ட வருவாய் அலுவலர் மரு.பெ.மேனகா பேசினார். இந்நிகழ்வில் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.ரா. மணி, இணை இயக்குநர் நலப்பணிகள், மரு.ம.வளர்மதி, மாநகர நல அலுவலர் மரு.யோகானந்த், மருத்துவ மனைகண்காணிப்பாளர் மரு .தனபால், மாவட்ட துணை இயக்குனர் மருத்துவப் பணிகள் (காசநோய்) மரு.ச.கணபதி, உட்பட செவிலியர் கல்லூரி மாணவ மாணவியர்கள் கலந்துகொண்டனர்.

# ஊத்தங்கரையில் ஜாக்டோ- ஜியோ சார்பாக மனித சங்கிலி போராட்டம்:ஏராளமானோர் பங்கேற்பு

**கிருஷ்ணகிரி,மார்ச்.25-**

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரையில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி அரசு ஊழியர்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஜாக்டோ ஜியோ ஆர்ப்பாட்டம் நடத்தினர்





பழைய பென்ஷன் திட்டத்தை உடனடியாக அமல்படுத்த வேண்டும் முடக்கப்பட்ட அகவிலைப்படி காலவரையின்றி முடக்கி வைக்கப்பட்டுள்ள சரண்டர் ஆகியவை உடனடியாக வழங்க வேண்டும். ஆசிரியர்கள் மற்றும் முதுநிலை ஆசிரியர்கள் ஊதிய முரண்பாடுகளை களைய வேண்டும் தொகுப்பூதியும் சிறப்பு காலமுறை ஊதியம் வழங்க வேண்டும். தினக்கூலியில் பணிபுரியும் ஆசிரியர்கள் சத்துணவு அங்கன்வாடி எம்ஆர்பி செவிலியர் கணினி இயக்குபவர் வருவாய் கிராம உதவியாளர், ஊர்புற நூலகர் உள்ளிட்ட அனைவருக்கும் காலமுறை ஊதியம் வழங்க வேண்டும், சாலை பணியாளர்களுக்கு 41 மாத கால பணி நீக்க காலத்தை முறைப்படுத்த வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஊத்தங்கரையில் மனித சங்கிலி போராட்டம் நடைபெற்றது.

இந்த மனித சங்கிலி ஆர்ப்பாட்டத்தில் அரசு ஊழியர்கள் சங்க மாவட்ட நிர்வாகிகள் ராஜேந்திரன், ஞானசேகரன், கணேசன் சரவணன் ராஜசேகர் ,பாரதி, கிருஷ்ணமூர்த்தி, சரவணன் ,மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ஜெகதாம்பிகை, சுபாஷ்சந்திரபோஸ் ஆகியோர் கலந்து கொண்டனர் . ஊதிய மாற்றம் 21 மாத நிலவைத் தொகை உடனடியாக வழங்க வேண்டும். முதல்வர் பங்கேற்ற வாழ்வாதார நம்பிக்கை மாநாட்டில் முதல் ஜாக்டோ- ஜியோ சார்பில் வழங்கப்பட்ட ஆசிரியர் அரசு ஊழியர் அரசு, பணியாளர் வாழ்வாதக்குகுறிய முக்கிய கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



# நங்கவள்ளி இரண்டாம் நிலை பேரூராட்சி சேலம் மாவட்டம்

ந.க.எண்.99/2021

**ஏப்பந்தபுள்ளி அறிவிப்பு**

நாள்: 06.03.2023

சேலம் மாவட்டம், நங்கவள்ளி பேரூராட்சியில் 2022-2023ஆம் ஆண்டு தூய்மை இந்தியா திட்டத்தில் (SBM 2.0) பழைய கழிவுகளை உயிரியல் அகழ்வு முறையில் நிலங்களை மீட்டெடுத்தல் (Bio Mining) பணி மேற்கொள்ள இரண்டு உறைகள் (Two Cover System) கொண்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்பள்ளி அறிவிப்பு.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. (இலட்சத்தில்) | செலுத்த வேண்டிய முன் வைப்புத் தொகை (ரூபாயில்) (only for Civil Works) | செலுத்த வேண்டிய ஒப்பந்தப் புள்ளி படிவம் விலை (வரிகள் உள்பட) (ரூபாயில்) | ஒப்பந்த தாரரின் தகுதி | வேலையை செய்து முடிக்க வேண்டிய காலம் (வேலை உத்திரவு தேதி |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | நங்கவள்ளி பேரூராட்சி பழைய வளம் மீட்பு பூங்கா இடத்தில் பழைய கழிவுகளை உயிரியல் அகழ்வு முறையில் நிலங்களை மீட்டெடுத்தல் (Bio Mining) பணி செய்தல் | 19.83 | 19830/- | 9720/- | Class 1 to II | 240 நாட்கள் |

1. செயல் அலுவலர் (அ) அவரால் அங்கீகரிக்கப்பட்டவரால் தகுதியான ஒப்பந்தாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்படுகிறது.
2. ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை https://tntenders.gov.in and http://www.tenders.tn.gov.in என்ற இணையதள முகவரிகளிலிருந்து இலவசமாக எடுத்துக் கொள்ளலாம். இந்த இணையதள முகவரிகளிலிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விபரங்களும் பெறலாம்.
3. முக்கிய தினங்கள்

அ) ஒப்பந்தப்புள்ளி நமூனா இறக்கம் செய்தல் : 06.03.2023 காலை 10.00 மணி முதல் 05.04.2023 மாலை 3.00 மணி
ஆ) ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் : 06.04.2023 மாலை 3.00 மணி
இ) ஒப்பந்தப்புள்ளிகள் திறத்தல் : 06.04.2023 பிற்பகல் 3.30 மணி

4. ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின், அதற்கு அடுத்த வேலை நாளில், அதே நேரத்தில், அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு திறக்கப்படும்.
5. ஒப்பந்தப்புள்ளி சம்பந்தப்பட்ட நிபந்தனைகளை நங்கவள்ளி பேரூராட்சி அலுவலகத்தில், அலுவலக வேலை நாட்களில், அலுவலக வேலை நேரத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

ஒம்/-சி.மாணிக்கம்,
தலைவர்,
நங்கவள்ளி பேரூராட்சி,
சேலம் மாவட்டம்.

ஒம்/-திருமதி கொ.ரேவதி,
செயல் அலுவலர்,
நங்கவள்ளி பேரூராட்சி,
சேலம் மாவட்டம்.

ந.க.எண்.6814/2021/உ4 நாள்: 13.02.2023

# நம்பியூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஈரோடு கலெக்டர் ஹெச்.கிருஷ்ணனுண்ணி ஆய்வு



**ஈரோடு.மார்ச்.25-**

ஈரோடு கலெக்டர் ஹெச். கிருஷ்ணனுண்ணி நம்பியூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் 2022-23 ஆம் ஆண்டிற்கான ஆண்டுத்தணிக்கை மேற்கொண்டு பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகளை பார்வையிட்டார்.

ஈரோடு கலெக்டர் ஹெச். கிருஷ்ணனுண்ணி நம்பியூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் 2022-23 ஆம் ஆண்டிற்கான ஆண்டுத்தணிக்கையில் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் அலுவலக நடைமுறை கோப்புகள் மற்றும் பதிவேடுகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வில் நம்பியூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 15 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டுவரும் ஊராட்சி ஒன்றிய பொது நிதிதிட்டம், 15வது நிதிக்குழு மான்ய திட்டம், சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி, அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம், ஜல் ஜீவன் மிஷன் திட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம் மற்றும் பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம் உள்ளிட்ட திட்டங்களின் கோப்புகள் மற்றும் அலுவலக நடைமுறை மற்றும் பகிர்மானம் உள்ளிட்ட பதிவேடுகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அலுவலக பதிவேடு மற்றும் கணினி பிரிவில் ஆய்வு மேற்கொண்டு நிலுவைக்கோப்புகளை உடனடியாக முடித்டவும் மற்றும் தற்போது கோடை காலம் துவங்கியுள்ளதால் பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் கிடைத்திடும் வகையில் ஆழ்துளை கிணறுகளை முழுமையாக பராமரித்திடுமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். தொடர்ந்து ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தினை சுற்றியுள்ள சுற்றுப்புறங்களை தூய்மையாக வைத்திருக்குமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் ஜெகதீசன், நம்பியூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சுமாள், சுபா, உட்பட துறைசார்ந்த பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# ஈரோடு டிவைன் நர்சரி மற்றும் பிரைமரி பள்ளி பரிசளிப்பு விழா




**ஈரோடு மார்ச் 25**

ஈரோடு கருங்கல் பாளையத்தில் செயல்பட்டு வரும் டிவைன் நர்சரி மற்றும் பிரைமரி பள்ளியின் 37 ஆம் ஆண்டு பரிசளிப்பு விழா நேற்று பள்ளி அரங்கில் நடைபெற்றது விழாவுக்கு பள்ளியின் செயல் தலைவர் விஸ்வநாதன் தலைமை தாங்கினார் பொதுச்செயலாளர் சுந்தர்ராமன் முன்னிலை வைத்தார் இந்த விழாவில் நடனம் பேச்சுப்போட்டி தடகளம் மற்றும் ஓவியம் உள்ளிட்ட பல்வேறு போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்ற ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை உள்ள 167 மாணவ மாணவிகளுக்கு பரிசு வழங்கும் விழா நடைபெற்றது இந்த நிகழ்ச்சியில் சேவை செம்மல் ஆற்றல் அசோக்குமார் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பரிசுகளை வழங்கி பாராட்டி பேசினார் விழாவில் அறங்காவலர் ஸ்ரீஹரி நிர்வாக அலுவலர் சுப்பிரமணிமெய்ஞான ஆசிரியர்கள் மற்றும் பள்ளி தலைமை ஆசிரியர் அலுவலர்கள் ஆசிரியர்கள் பெற்றோர்கள் கலந்து கொண்டனர் விழாவின் முடிவில் துணை முதல்வர் தேவகி நன்றி கூறினார்

# உலக காசநோய் தின விழிப்புணர்வு பேரணி: ஊட்டியில் கலெக்டர் சா.ப.அம்ரித் துவக்கி வைத்தார்




**ஊட்டி, மார்ச்.25-**

நீலகிரி மாவட்டம் ஊட்டி இரயில் நிலையம் முன்பிருந்து உலக காசநோய் தினத்தை முன்னிட்டு கல்லூரி மாணவ மாணவியர்கள் கலந்து கொண்ட விழிப்புணர்வு பேரணியினை மாவட்ட கலெக்டர் சா.ப.அம்ரித் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இப் பே ர ணி யா னது உதகை இரயில் நிலையம் முன்பிருந்து தொடங்கி, மார்க்கெட், கமர்சியல் சாலை, சேரிங்கிராஸ் வழியாக சென்று பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில் சென்று நிறைவடைந்தது. இப்பேரணியில் அரசு மருத்துவக் கல்லூரி மாணவ மாணவியர் 150 நபர்களும், அரசு செவிலியர் பயிற்சி பள்ளி மாணவியர்கள் 45 நபர்களும், ஜே.எஸ்.எஸ் பார்மசி கல்லூரி மாணவ, மாணவியர்கள் 40 நபர்களும், மருத்துவர்கள் 10 நபர்களும், என மொத்தம் 245 நபர்களும் பேரணியில் கலந்து கொண்டனர். இப்பேரணியில் பொது மக்களுக்கு காசநோய் தொற்று அறிகுறிகள் சிகிச்சை போன்ற விவரங்கள் அடங்கிய விழிப்புணர்வு பதாகைகள் எந்தி சென்று, பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

நீலகிரி மாவட்டத்தில் காசநோய் தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் குறைவாக காணப்பட்டாலும் காசநோய் இல்லாத மாவட்டமாக மாற்றுவதற்க்கான முயற்சியில் மாவட்ட 'காசநோய்' மையம் பல்வேறு நிகழ்ச்சிகளை முன்னெடுத்து வருகிறது. 2022ஆம் ஆண்டு என்.ஐ.ஆர்.டி.ஃஐ.சி.எம்.ஆர் இந்தியா முழுவதும் நடத்திய காசநோய் தொற்று குறைவாக உள்ள பகுதிகளை கண்டறியும் போட்டியில் பங்குபெற்று நீலகிரியில் 15 கிராமங்களை தேர்வு செய்து நடத்திய காசநோய் கண்டறியும் கணக்கெடுப்பு முகாமில் மாநில அளவில் வெள்ளி பதக்கத்தை பெற்று இருக்கிறோம். மேலும் இந்த ஆண்டு தங்கப்பதங்கத்திற்க்கான போட்டியில் பங்கு பெற்று உள்ளோம். நடமாடும் நுண்கதிர் பரிசோதனை வாகனம் மூலமாக நீலகிரி மாவட்டம் முழுவதும் கிராமம் கிராமமாக சென்று சாக்கரை நோயாளிகள், கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள், நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக உள்ளவர்கள் மற்றும் இருமல், காய்ச்சல் போன்ற அறிகுறி உள்ளவர்களை பரிசோதனை செய்வதன் மூலமாக காசநோய் தொற்று இல்லாத நிலையை உருவாக்குவதற்காக பாடுபட்டு வருகிறோம். மேலும் தனியார் மருத்துவமனை மருத்துவர்கள் பரிந்துரை செய்யும் காசநோய் அறிகுறி உள்ளவர்களுக்கு உலக தரம் வாய்ந்த சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. அதற்காக தனியார் மருத்துவர்களுக்கு சிறப்பு ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகிறது. காசநோய் சிகிச்சை பெற்று வரும் பயனாளிகளுக்கு ஊட்டச்சத்து உதவித்தொகையாக மாதம் ரூபாய்.500 வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிகழ்ச்சியில் உதகை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.மனோகரி, உதகை வருவாய் கோட்டாட்சியர் (பொறுப்பு) பூஷணகுமார், துணை இயக்குனர் (சுகாதாரப் பணிகள்) மரு.பாலுசாமி, துணை இயக்குநர் மருத்துவப்பணிகள் (காசநோய்) மரு.மு.சக்திவேல், இரண்டாம் நிலை மருத்துவ அலுவலர் இரா.சபரீசன், வட்டாட்சியர் ராஜசேகரன், மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**கண், ரத்த தானம் செய்வீர்**

# முதலமைச்சரின் சூரிய சக்தி பம்புசெட்டுகள் திட்டத்தின் கீழ் 84 பயனாளிகளுக்கு ரூ.1.65 கோடி மானியத்தொகை விடுவிக்கப்பட்டுள்ளது

## நீலகிரி மாவட்டத்தில் பயனடைந்தோர் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி

**ஊட்டி,மார்ச்.25**

தமிழ்நாடு முதலமைச்சர் வேளாண் மற்றும் உழவர் நலத்துறை சார்பில் விவசாயி



கள் பயன் பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை தீட்டி சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறார்கள்.

குறிப்பாக, கிராமப்புற விவசாயிகளின் வாழ்வாதாரத்தினையும், வருமானத்தினையும் பெருக்கும் நோக்கில் வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில், நில மேம்பாட்டு திட்டங்கள், சிறுபாசன திட்டங்கள், பாசன பகுதி மேம்பாடு மற்றும் நீர் மேலாண்மை திட்டம், பண்ணைக்குட்டைகள் அமைத்தல், வேளாண் கருவிகளை மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்குதல், சூரிய மின்சக்தி பம்ப் செட் திட்டம் உள்ளிட்ட பல்வேறு வகையான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. விதைப்பு பயிர் பாதுகாப்பு அறுவடை மற்றும் அறுவடைக்குப்பின் மதிப்புக் கூட்டுதல், குறித்த நேரத்தில் பணிகளை மேற்கொள்ள ஏதுவாக வேளாண் இயந்திரமயமாகக்கலை விவசாயிகளிடையே ஏற்படுத்தி, மண் வளத்தினை பாதுகாத்து, புதிய பாசன



ஆதாரங்களை உருவாக்கி, பாசன நீரினை இறைத்திட புதுப்பிக்க தக்க ஆற்றலுக்கான தொழில் நுட்பங்களை பயன்படுத்தி, விளைவித்த வேளாண் விளை பொருட்களை உரிய விலையின்றி வீணாவதை தடுத்து, விவசாயிகள் மதிப்புக்கூட்டி இலாபம் ஈட்ட முக்கிய பங்காற்றுகிறது வேளாண்மைப் பொறியியல் துறை. மேலும், வேளாண் பொறியியல் துறையின் சார்பில் முதலமைச்சரின் சூரிய சக்தி பம்புசெட்டுகள் திட்டத்தின் கீழ், மானிய விலையில் தனித்து சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகள் அமைக்க விருப்பமுள்ள விவசாயிகள் மற்றும் விவசாய குழுக்களுக்கு, பாசன வசதிக்காக மின்கட்டமைப்புடன் சாராத தனித்து சூரிய சக்தியால் இயங்கம் பம்புசெட்டுகள் விவசாயிகளுக்கு 70மூ மானியத்தில் 40மூ தமிழக அரசு மானியம் மற்றும் 30மூ ஒன்றிய அரசு மானியம்) அமைத்து கொடுக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்திற்கு 2021-22 மற்றும் 2022-23-ம் ஆண்டில் 84 எண்கள் ஒதுக்கீடு பெறப்பட்டு பணிகள் நிறைவுபெறும் தருவாயில் உள்ளது.

முதலமைச்சரின் சூரிய சக்தி பம்புசெட்டுகள் திட்டத்தின் கீழ் 84 பயனாளிகளுக்கு ரூ.1.65 கோடி மானியத் தொகை விடுவிக்கப்பட்டுள்ளது. இதில் மாநில அரசின் பங்கு ரூ.94.47 இலட்சம் மற்றும் ஒன்றிய அரசின் பங்கு ரூ.70.85 இலட்சம் ஆகும். இதில் ஆதிதிராவிட



மற்றும் பழங்குடியின வகுப்பைச் சேர்ந்த 14 பயனாளிகளுக்கு 20மூ கூடுதல் மானியத்தொகை ரூ.8.42 இலட்சம் வழங் கப் பட் டுள் ளது. மேலும், வேளாண் விளை பொருட்களை மதிப்பு கூட்டும் இயந்திரங்கள் வழங்குதல் திட்டத்தின் கீழ், நடப்பாண்டில் (2022-23) 221 விவசாயிகளுக்கு தேயிலை அறுவடை இயந்திரம் மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது.இவைகள் மட்டுமின்றி சூரிய கூடார உலர்த்திகள் அமைத்தல் திட்டத்தின் கீழ், வேளாண் விளைபொருட்களை உலர்த்திட பசுமை குடில் வகையிலான 400 முதல் 1000 சதுர அடி பரப்பு கொண்ட பாலிகார்பனேட் தகடுகளை கொண்ட சூரிய கூடார உலர்த்திகள் 40சதவீதம் மானியத்தில் அமைத்து கொடுக்கப்படுகிறது. சூரிய சக்தி மின்வேலி அமைத்தல் திட்டத்தின் கீழ், வனத்தை ஒட்டியுள்ள பகுதிகளில் அமைந்துள்ள விவசாய நிலங்களில் பயிரிடப்பட்டுள்ள விவசாய விளைபொருட்களை வனவிலங்குகள் சேதப்படுத்தாமல் பாதுகாத்திட சூரிய சக்தி மின்வேலி (5 வரிசை, 7 வரிசை, 10 வரிசை) 40சதவீதம் பின்னேற்பு மானியத்துடனும், மானியத்தில் மின் மோட்டார் பம்பு செட்டுகள் அமைத்தல் திட்டத்தின் கீழ், 10 ஆண்டுகள் பழைய மின்மோட்டார் பம்பு செட்டுகளை புதிதாக மாற்றுவதற்கு அல்லது புதிதாக அமைக்கப்படும் கிணறுகளுக்கான புதிய மின் மோட்டார் பம்பு செட்டுகள் அமைப்பதற்கு மோட்டாரின் மொத்த விலையில் 50சதவீதம் அல்லது ரூ.10,000- இவற்றில் எது குறைவோ அத்தொகை வழங்கப்படுகிறது.மேலும், வேளாண் விளைபொருட்களை மதிப்பு கூட்டும் இயந்திரங்கள் வழங்குதல் திட்டத்தின் கீழ், வேளாண் விளைபொருட்களை மதிப்பு கூட்டும் இயந்திரங்களை வாங்குவதற்கு 40சதவீதம் மானியம் அளிக்கப்படுகிறது. வேளாண்மை இயந்திரமயமாக்கும் துணை இயக்க திட்டத்தின் கீழ் பல்வேறு வேளாண் இயந்திரங்களை தனிப்பட்ட விவசாயிகள் வாங்குவதற்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின சிறு, குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கு 50மூ மானியத்திலும் இதர விவசாயிகளுக்கு 40சதவீதம் மானியத்திலும், ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின பிரிவினைச் சார்ந்த சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு கூடுதலாக 20மூ மானியத்துடனும் வழங்கப்படுகிறது. இந்த முதலமைச்சரின் சூரிய சக்தி பம்பு செட்டுகள் நிறுவுவதன் மூலம் விவசாயிகள் தாங்கள் திருப்திகரமாக பயனடையும் வகையிலும், சரியான முறையில் பாசனம் செய்யவும், பாசன பரப்பினை அதிகப்படுத்தி டீசல் செலவினை சேமிக்க முடிகிறது. நேரம் மீதமாகிறது எனவே, விவசாயிகள் மாற்றுப்பயிர் சாகுபடியை தேர்ந்தெடுத்து, உற்பத்தியை அதிகரித்து கூடுதல் வருவாய் பெறவும் வழி வகை செய்கிறது.

முதலமைச்சரின் சூரிய சக்தி பம்புசெட்டுகள் திட்டத்தின் கீழ் பயனடைந்த விவசாயி பேச்சியம்மாள் கூறியதாவது:

என் பெயர் பேச்சியம்மாள். என் கணவர் பெயர். சுப்ரமணி. நாங்கள் நீலகிரி மாவட்டம், உதகை வட்டாரம், இத்தலார் கிராமத்தில் வசித்து வருகிறோம். நாங்கள் விவசாயம் தொழில் செய்து வருகிறோம். எங்களுக்கு 2 ஏக்கர் நிலம் உள்ளது. இந்நிலத்தில் வேளாண்மை பொறியியல் துறையின் மூலம் 5 ர்P திறன் கொண்ட சூரிய சக்தி பம்பு செட்டு தாழ்த்தப்பட்ட வகுப்பினை சேர்ந்த எனக்கு 90மூ மானியத்தில் சூரிய சக்தி பம்பு செட்டு அமைத்து கொடுத்தார்கள். இதன் மொத்த விலை ரூ..2,73,548-ல் எங்களது பங்களிப்பாக ரூ.33,254/-மட்டுமே செலுத்தினோம். எங்களது நிலத்தில் தெளிப்புநீர் பாசன அமைப்பு அமைக்கப்பெற்று சூரிய சக்தி பம்பு செட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது. அதனால் எங்களுக்கு குறைந்த நீரில் பாசனம் செய்ய முடிந்தது. மேலும் டீசல் வாங்குவதற்கான பணமும், நேரமும் மிச்சமாகிறது. இதன் மூலம் லாபம் ஈட்ட முடிக்கிறது. இதுபோன்று விவசாயிகளின் நலன்கருதி பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்திய, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எங்கள் குடும்பத்தின் சார்





பில் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம் என்று தெரிவித்தார்.

முதலமைச்சரின் சூரிய சக்தி பம்புசெட்டுகள் திட்டத்தின் கீழ் பயனடைந்த விவசாயி மூர்த்தி கூறியதாவது:

என் பெயர்.மூர்த்தி. என் தகப்பனார் பெயர் செவனன். நாங்கள் உதகை வட்டத்திற்குட்பட்ட இத்தலார் கிராமத்தில் வசித்து வருகிறோம். எனக்கு 2.50 ஏக்கர் நிலம் உள்ளது. அதில் 5ர்P திறன் கொண்ட சூரிய சக்தி பம்பு செட் வேளாண்மை பொறியியல் துறையின் மூலம் 70மூ மானியத்தில் அமைத்து



கொடுத்தனர். எங்களது பங்களிப்பாக மொத்த தொகை ரூ.2,73,548/-ல் ரூ.86,652 மட்டுமே செலுத்தினேன். சூரிய சக்தி பம்புசெட்டு அமைப்பதன் மூலம் டீசலுக்கான செலவு மற்றும் நேரவிரயம் குறைந்துள்ளது. மேலும் சூரியசக்தி பம்புசெட்டுடன் தெளிப்புநீர் பாசன அமைப்பினை இணைத்துள்ளதால் குறைவான தண்ணீரில் முழுமையாக பாசனம் செய்ய முடிகிறது. உற்பத்தி செலவு குறைந்து இலாபம் ஈட்ட முடிகிறது. எங்களைப் போன்ற விவசாயிகளின் நலனினை கருத்தில் கொண்டு பல்வேறு திட்டங்களை செயல்படுத்திய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்று தெரிவித்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு விவசாயிகளின் வாழ்வாதாரம் மற்றும் வருமானத்தினை உயர்த்திடும் வகையில் இது போன்ற பல்வேறு சிறப்பு திட்டத்தினை செயல்படுத்தியதற்காக, நீலகிரி மாவட்ட விவசாயிகள் நெஞ்சம் நிறைந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.

**தொகுப்பு**
**நி.சையத் முகம்மத்**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**இரா.சரண்**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி)**
**நீலகிரி மாவட்டம்.**

# சுற்றுச்சூழல் கலந்துரையாடல் நிகழ்ச்சி

**ஊட்டி, மார்ச்.25-**

குன்னூர் கல்வி மாவட்ட தேசிய பசுமை படை சார்பில் வாழைத்தோட்டம் ஜி.ஆர்.ஜி பள்ளியில் சுற்றுச்சூழல் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது.

தேசிய பசுமைப்படை குன்னூர் கல்வி மாவட்டத்தின் உள்ளூர் இயற்கை வளங்களை அறிந்து கொள்ளும் நிகழ்ச்சியின் ஒரு பாகமாக ஜி ஆர் ஜி நினைவு மேல்நிலைப் பள்ளி வாழைத் தோட்டத்தில் பள்ளி மாணவர்களுக்கு நம்ம ஊர் சுற்றுச்சூழல் குறித்து கலந்துரையாடல் மற்றும் கள பயிற்சி நடத்தப்பட்டது. நிகழ்ச்சிக்கு பள்ளி தலைமை ஆசிரியர் குமரன் வரவேற்றுப் பேசுகையில் வனப்பகுதியில் வாழும் மக்களுக்கு இதுபோன்ற நிகழ்ச்சி அவர்களின் இயற்கை அறிவினை நாமும் பெற சிறந்த நிகழ்வாக இது அமையும் என்றார்.உதவி தலைமை ஆசிரியர் எம் என் கணேசன் பேசுகையில் அதிக வறட்சியான காலங்களில் வனவிலங்குகள் மனிதர்கள், தாவரங்கள், பற்றிய செய்தி மாணவர்களின் கல்வியின் முக்கிய நிலையாக இருக்கும் என்றார். தேசிய பசுமை படை குன்




னூர் கல்வி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வே. சிவதாஸ் கள பயிற்சி அளித்து மாணவர்களிடம் பேசுகையில், மழை குறைவான பகுதியான மசினகுடி பகுதியில் வளரும் தாவரங்கள் விலங்கினங்கள் அவற்றின் இயல்பினை மாணவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது. பள்ளியில் விதை சேகரிப்பு ,மூலிகை பண்ணை அமைப்பது, மகரந்த சேர்க்கைக்கு அதிகம் உதவும் பூச்சிகள் தேனீக்களின் பாதுகாப்பு உள்ளூரில் உள்ள பாம்புகள், பட்டாம்பூச்சிகள், குறித்து அவர்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. மேலும் கீஸ்டோன் கிராம அருங்காட்சியகத்திற்கு அழைத்துச் சென்று விளக்கம் அளிக்கப்பட்டது. மூங்கில் மரங்கள் வனங்களின் நடவு செய்யும் அவசியம் குறித்து மாணவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. பள்ளிகளில் மூங்கில் நடவு செய்ய மாணவர்கள் தீர்மானித்தனர். பழங்குடியின மக்களின் பாரம்பரிய அறிவினையும் அவர்களின் விவசாயம் வாழ்க்கை முறைகளை மாணவர்கள் கற்றுக் கொள்வது மிக அவசியம் என்று விளக்கம் அளித்தார்.தேசிய பசுமைப்படை பள்ளி ஒருங்கிணைப்பாளர் செந்தில் குமார் சூழல் சமநிலை குறித்து அறிவியல் விளக்கங்களுடன் மாணவர்களுக்கு பயிற்சி அளித்தார். இந்நிகழ்ச்சியின் ஏற்பாட்டினை தேசிய பசுமை படை பொறுப்பாசிரியர் செய்திருந்தார்.

# ஊட்டி நகராட்சி நிர்வாகத்தை கண்டித்து சி.ஐ.டி.யூ. சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்

**ஊட்டி, மார்ச்.25-**

சாலையோர கடைகளை அகற்றி வரும் ஊட்டி நகராட்சி நிர்வாகத்தை கண்டித்து சி.ஐ.டி.யு. சங்கத்தினர் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப் பாட் டத் திற்கு மாவட்டதலைவர் எல். சங்கரலிங்கம் தலைமை தாங்கினார். சி.ஐ.டி.யு. மாவட்ட பொருளாளர் நவீன் சந்திரன் ஆர்ப்பாட்டத்தை தொடங்கி வைத்தார். இதுகுறித்து மாவட்ட செயலாளர் வினோத் கூறியதாவது:-

ஊட்டி தாவரவியல் பூங்கா சாலையோர வியாபாரிகள் பல ஆண்டு காலமாக சிறுசிறு கடைகளை வைத்து பிழைப்பு நடத்தி வருகின்றனர். சமீப காலமாக நகராட்சி நிர்வாகமும் காவல்துறையும் இணைந்து இந்த வியாபாரிகள் கடைகளை அப்புறப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. கடைகளை அப்புறப்படுத்தினால் அந்த வியாபாரிகள் வாழ்வதற்கு வேறு வழி இல்லாமல் தவிக்கும் சூழ்நிலை உள்ளது. மேலும் அங்குள்ள அனைத்து வியாபாரிகளுக்கு நகராட்சி நிர்வாகம் மூலம் நிரந்தரமாக கடைகளை கட்டித் தர வேண்டும். அதுவரை அந்த வியாபாரிகள் வியாபாரம் செய்து கொண்டிருக்கும் இடத்திலேயே வியாபாரம் செய்ய அனுமதிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். இதில் வியாபார சங்கச் செயலாளர் ரபீக், நகராட்சி செயலாளர் சேகர், ஆட்டோ சங்கச் செயலாளர் யோகேஷ், சாலையோர வியாபாரிகள் மாவட்ட பொருளாளர் கோகிலா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

### பாகிஸ்தானில் ஆசிய கோப்பை கிரிக்கெட்:

# இந்திய அணி மோதும் போட்டிகள் பொதுவான இடத்தில் நடக்கிறது




**துபாய், மார்ச் 25-**

ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டி பாகிஸ்தானில் நடைபெறவுள்ள நிலையில் இந்தியா மோதும் போட்டிகளை பொதுவான இடத்தில் நடத்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

**6 அணிகள் பங்கேற்கும்...**

16-வது ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டி வருகிற செப்டம்பர் மாதம் பாகிஸ்தானில் நடத்த திட்டமிடப்பட்டது. 6 அணிகள் பங்கேற்கும் இப்போட்டித் தொடர் ஒரு நாள் போட்டி முறையில் நடத்தப்படுகிறது. இதற்கிடையே பாகிஸ்தானுக்கு சென்று இந்திய அணி விளையாடாது என்று இந்திய கிரிக்கெட் வாரிய செயலாளரும் ஆசிய கிரிக்கெட் தலைவருமான ஜெய்ஷா தெரிவித்தார். ஆசிய கோப்பை போட்டியை வேறு இடத்துக்கு மாற்ற வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

**பாக். கடும் எதிர்ப்பு...**

இதற்கு பாகிஸ்தான் கடும் எதிர்ப்பு தெரிவித்தது. பாகிஸ்தானில் ஆசிய கோப்பை போட்டியை நடத்தாவிட்டால் இந்தியாவில் நடைபெறும் உலக கோப்பை போட்டியை புறக்கணிப்போம் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் மிரட்டல் விடுத்தது. இந்த விவகாரம் தொடர்பாக ஆலோசனைகள், பேச்சுவார்த்தைகள் நடந்து வந்தன. சில நாட்களுக்கு முன்பு இந்தியா மற்றும் பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியங்களுக்கு இடையே கூட்டம் நடந்தது. இதில் ஆசிய கோப்பை போட்டியை எங்கு நடத்துவது என்பது குறித்து ஆலோசிக்கப்பட்டது. இந்தியா மோதும் போட்டிகளை பாகிஸ்தானில் நடத்தாமல் பொதுவான இடத்தில் நடத்துவதற்கான யோசனை குறித்தும் விவாதிக்கப்பட்டதாக தெரிகிறது.

**பின்னர் அறிவிப்பு...**

இந்த நிலையில் ஆசிய கோப்பை போட்டியை பாகிஸ்தானில் நடத்தவும் இந்திய அணி பங்கேற்கும் போட்டிகளை மட்டும் பொதுவான இடத்தில் நடத்தவும் முடிவு செய்யப்பட்டிருப்பதாக தகவல் வெளியாகி இருக்கிறது. ஐக்கிய அரபு எமிரேட்ஸ், இலங்கை, இங்கிலாந்து, வங்காள தேசம், ஓமன் ஆகியவற்றில் ஏதாவது நாட்டில் இந்தியா- மோதும் போட்டிகள் நடத்தப்படலாம் என்று தெரிகிறது. பொதுவான இடம் பற்றிய முடிவு பின்னர் தெரிவிக்கப்படும் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

**இறுதி ஆட்டமும்...**

மேலும் இறுதிப் போட்டிக்கு இந்தியா தகுதி பெற்றால் அந்த ஆட்டமும் பொதுவான இடத்திலேயே நடத்தப்படும். இது தொடர்பாக இறுதி முடிவு விரைவில் அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. விரைவில் நடைபெற உள்ள ஆசிய கிரிக்கெட் கவுன்சில் கூட்டத்தில் விவாதித்து, இந்தியா மோதும் போட்டிக்கான பொதுவான இடம் குறித்து தேர்ந்தெடுக்கப்படலாம்.

### சர்வதேச அளவில் 120 கோல்கள்:

# கால்பந்து விளையாட்டில் புதிய படைத்த சாதனை ரொனால்டோ



**லிஸ்பன், மார்ச் 25-**

கால்பந்து விளையாட்டில் சர்வதேச அளவில் புதிய சாதனை படைத்துள்ளார் போர்ச்சுகல் அணியின் வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ. கால்பந்தாட்ட உலகின் தலைசிறந்த வீரர்களில் ஒருவராக ரொனால்டோ அறியப்படுகிறார்.

**குவைத் வீரர்...**

இந்நிலையில், சர்வதேச அளவில் அதிக போட்டிகளில் விளையாடிய வீரர் என்ற தனித்துவ சாதனையை அவர் படைத்துள்ளார். மொத்தம் 197 சர்வதேச போட்டிகளில் அவர் இதுவரை விளையாடி உள்ளார். நடப்பு யூரோ கோப்பை தகுதி சுற்றில் லீக்கின்ஸ்டைன் அணிக்கு எதிராக ரொனால்டோ களம் கண்டார். அது அவரது 197-வது சர்வதேச போட்டியாக அமைந்தது. இந்தப் போட்டியில் மொத்தம் 2 கோல்களை அவர் பதிவு செய்திருந்தார். இதன் மூலம் குவைத் வீரர் அல்-முதாவாவின் சாதனையை அவர் தகர்த்துள்ளார். வியாழக்கிழமை அன்று இந்த சாதனையை ரொனால்டோ படைத்திருந்தார். கடந்த 2003 முதல் அவர் சர்வதேச போட்டிகளில் போர்ச்சுகல் அணிக்காக விளையாடி வருகிறார்.

**120 கோல்கள்....**

சர்வதேச போட்டிகளில் மொத்தம் 120 கோல்களை ரொனால்டோ பதிவு செய்துள்ளார். இதன் மூலம் அதிக கோல்கள் பதிவு செய்தி வீரர்களின் பட்டியலிலும் அவர் முதலிடத்தில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த ஆண்டு நடைபெற்ற உலகக் கோப்பை தொடரின் போது அணியில் அவருக்கான இடம் சந்தேகமானதாக இருந்தது. இந்த சூழலில் யூரோ தொடரில் அவரது பங்களிப்பு நிச்சயம் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சூர்யகுமாருக்கு வாய்ப்புகளை வழங்க வேண்டும்: கபில்தேவ்



**மும்பை, மார்ச் 25-**

சூர்யகுமாருக்கு வாய்ப்புகள் வழங்க வேண்டும் என்று கபில்தேவ் கூறியுள்ளார்.

**முதல் பந்திலேயே...**

இந்திய கிரிக்கெட் அணி பேட்ஸ்மேன் சூர்யகுமார் யாதவ், 20 ஓவர் கிரிக்கெட்டில் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார். ஆனால் ஒருநாள் போட்டியில் அவர் தொடர்ந்து மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார். ஆஸ்திரேலியாவுக்கு எதிராக 3 ஒரு நாள் போட்டியிலும் சூர்யகுமார் யாதவ் ரன் ஏதும் எடுக்காமல் அவுட் ஆனார். இந்த ஆட்டங்களில் முதல் பந்திலேயே ஆட்டம் இழந்தார். இதனால் அவர் கடும் விமர்சனத்துக்குள்ளாகி இருக்கிறார்.

**முயற்சித்து பார்க்க...**

ஒருநாள் போட்டியில் சூர்யகுமார் யாதவுக்கு பதிலாக சஞ்சு சாம்சனை முயற்சித்து பார்க்க வேண்டும் என்று முன்னாள் வீரர் வாசிம் ஜாபர் கருத்து தெரிவித்தார். இதே போல் சில முன்னாள் வீரர்களும் எதிர்ப்பு தெரிவித்து இருக்கிறார்கள். இந்த நிலையில் சூர்யகுமார் யாதவுக்கு இந்திய முன்னாள் கேப்டன் கபில் தேவ் ஆதரவு தெரிவித்து உள்ளார். சூர்யகுமார் போன்ற திறமையான வீரரை ஆதரிப்பதன் மூலம் அணி நிர்வாகம் சரியானதை செய்வதாக நான் கருதுகிறேன். நன்றாக விளையாடிய வீரருக்கு எப்போதும் அதிக வாய்ப்புகள் கிடைக்கும்.

**இது சரியானதல்ல...**

சூர்யகுமார் யாதவை சஞ்சு சாம்சனுடன் ஒப்பிடாதீர்கள். இது சரியானதல்ல. சஞ்சுசாம்சன் மோசமாக செயல்பட்டால் வேறுயாரையாவது பற்றி பேசுவீர்கள். அணி நிர்வாகம் சூர்யகுமார் யாதவை ஆதரிக்க முடிவு செய்திருந்தால் அவருக்கு அதிக வாய்ப்புகள் வழங்க வேண்டும். மக்கள் தங்களது கருத்துக்களை தெரிவிப்பார்கள். ஆனால் இறுதி முடிவு நிர்வாகத்தின் கையில் தான் உள்ளது.

**ஒன்றும் புதிதல்ல...**

ஒருநாள் போட்டியில் பேட்டிங் வரிசையை மாற்றுவது ஒன்றும் புதிதல்ல. சூர்யகுமார் யாதவை 7-வது வரிசையில் இறக்கியதற்கு சில காரணங்கள் இருந்திருக்க வேண்டும். போட்டி முடிந்ததும் பேசுவது மிகவும் எளிதானது. சூர்யகுமார் யாதவை 7-வது வரிசையில் களம் இறக்கிய பின்னணியில் அவர் போட்டியை வெற்றிகரமாக முடிக்க வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கலாம். இவ்வாறு அவர் கூறினார்.

# உலகக்கோப்பை காலிறுதியில் ஆஸி.யை காலி செய்த இந்தியா

கடந்த 2011-ல் நடைபெற்ற ஒருநாள் கிரிக்கெட் உலகக் கோப்பை தொடரின் காலிறுதியில் ஆஸ்திரேலிய அணியை காலிறுதியில் வீழ்த்தி அரையிறுதி, இறுதி என கோப்பையை வென்று அசத்தி இருந்தது. அந்தப் போட்டி மார்ச் 24-ல் (நேற்றைய தினம்) நடைபெற்றது. இந்திய அணியின் வெற்றியில் யுவராஜ் சிங் மற்றும் சுரேஷ் ரெய்னா என இருவரும் பிரதான பங்கு வகித்தனர்.



ஆட்டத்தில் அழுத்தம் நிறைந்த நேரத்தில் அபாரமாக பேட் செய்து அசத்தினர். இந்த வெற்றி ஒவ்வொரு கிரிக்கெட் ரசிகராலும் மறக்க முடியாத ஒரு அனுபவம். ஏனெனில் 1999, 2003, 2007 என தொடர்ச்சியாக மூன்று உலகக் கோப்பையை வென்று சாதனை படைத்திருந்தது ஆஸ்திரேலிய அணி. அகமதாபாத் நகரில் நடைபெற்ற இந்தப் போட்டியில் டாஸ் வென்ற ஆஸ்திரேலிய அணி பேட்டிங் தேர்வு செய்தது. இந்தத் தொடரில் நடப்பு சாம்பியன் என்ற அந்தஸ்துடன் அந்த அணி களம் கண்டிருந்தது. 50 ஓவர்களில் 6 விக்கெட்டுகள் இழப்பிற்கு 260 ரன்கள் எடுத்திருந்தது ஆஸி.

# சென்னை சூப்பர் கிங்சுடன் இணைந்த பென் ஸ்டோக்ஸ்



வரும் 31-ம் தேதி தொடங்க உள்ள ஐபிஎல் சீசனின் முதல் போட்டியில் குஜராத் மற்றும் சென்னை அணிகள் விளையாடுகின்றன. இதற்காக தோனி தலைமையிலான சென்னை சூப்பர் கிங்ஸ் அணி தற்போது சென்னையில் முகாமிட்டு பயிற்சி மேற்கொண்டு வருகிறது. இந்தச் சூழலில் அணியுடன் இணைந்துள்ளார் பென் ஸ்டோக்ஸ்.

கடந்த ஆண்டு டிசம்பரில் நடைபெற்ற ஐபிஎல் ஏலத்தில் இங்கிலாந்து ஆல்-ரவுண்டர் பென் ஸ்டோக்ஸை ரூ.16.25 கோடிக்கு வாங்கி இருந்தது சென்னை சூப்பர் கிங்ஸ் அணி. இவர் முக்கிய போட்டிகளில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தும் மேட்ச் வின்னர். அதற்கு உதாரணம் 2019 ஒருநாள் மற்றும் 2022 டி20 உலகக் கோப்பை இறுதிப்போட்டியை சொல்லலாம். அதுமட்டுமல்லாது டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தி வரும் இங்கிலாந்து அணியின் கேப்டன் இவர்.

# அப்ரிடியால்தான் உயிருடன் இருக்கிறேன்: இம்ரான் நசீர்

பாகிஸ்தான் 2007 ஆம் ஆண்டு உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் தோல்வி அடைந்தது. இதில் அந்த அணியின் பயிற்சியாளர் பாப் உல்மர் ஓட்டல் அறையில் சடலமாக கண்டெடுக்கப்பட்டார். அதன் மர்மங்களே இன்னும் வெளிவரவில்லை. இந்த நிலையில் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் தொடக்க வீரர் இம்ரான் நசீர் வெளியிட்டுள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது. சமீபத்தில் பாகிஸ்தான் இம்ரான் நசீர் தான் கிரிக்கெட் திறனில் சிறந்த நிலையில் இருந்த போது தனக்கு மெல்ல கொல்லும் விஷம் கொடுக்கபட்டதாகவும். அதில் இருந்து ஷாகித் அப்ரிடிதான் தன்னை காப்பாற்றினார் என கூறி உள்ளார்.

நாதிர் அலி போட்காஸ்டில் இம்ரான் நசீர் கூறி இருப்பதாவது:-சமீபத்தில் என்னுடைய மருத்துவ அறிக்கையில் எனக்கு விஷம் கொடுக்கப்பட்டிருந்தது தெரிய வந்தது. மெர்குரி திரவத்தை என்னுடைய உணவில் யாரோ சேர்த்து இருக்கிறார்கள். இது ஒரு மெல்ல கொல்லும் விஷம். அது உங்கள் மூட்டை அடைந்து அவற்றை சேதப்படுத்துகிறது. 8-10 ஆண்டுகளாக, எனது அனைத்து மூட்டுகளுக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டது. அண்ணன் அப்ரிடிக்கு நான் எப்படி கைமாறு செய்யப் போகிறேன் என்று எனக்கு தெரியவில்லை. என கூறி உள்ளார்.

# சுவிஸ் ஓபன் பேட்மிண்டன்: பி.வி. சிந்து வெளியேற்றம்

சுவிஸ் ஓபன் சர்வதேச பேட்மிண்டன் போட்டி பாசெல் நகரில் நடந்து வருகிறது. இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நடப்பு சாம்பியனான இந்தியாவின் பி.சி.சிந்து அதிர்ச்சி தோல்வி அடைந்து வெளியேறினார். அவர் 2-வது சுற்றில் இந்தோனேசியாவின் புத்ரி குசுமாவர்தானியிடம் 15-21, 21-12, 18-21 என்ற செட் கணக்கில் தோற்றார். ஏற்கனவே இந்தியாவின் ஸ்ரீகாந்த், பிரனாய், மிதுன், மஞ்சுநாத் ஆகியோர் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் தோற்றனர். இதன் மூலம் சுவிஸ் ஓபன்பேட்மின்டனில் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் சவால் முடிவுக்கு வந்தது.



ஆண்கள் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சாத்விக்-சிராஜ் ஜோடி கால் இறுதிக்கு தகுதி பெற்றது. தைவானின் பாங் சிக்லீ-ஜென் லீ ஜோடியை 12-21, 21-17, 28-26 என்ற கணக்கில் கடுமையாக போராடி வென்று கால் இறுதிக்கு இந்திய ஜோடி முன்னேறியது. சாத்விக்-சிராஜ் ஜோடி கால் இறுதியில் டென்மார்க்கின் ஜெப்பே பே-லாஸ்சே மோல் ஹெடே ஜோடியுடன் மோதுகிறது.

# நியூசிலாந்து - இலங்கை மோதும் முதல் ஒருநாள் இன்று துவக்கம்

இலங்கை கிரிக்கெட் அணி, நியூசிலாந்தில் சுற்றுப் பயணம் செய்து அந்த நாட்டு அணிக்கு எதிராக விளையாடி வருகிறது. இவ்விரு அணிகள் இடையிலான 2 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரை நியூசிலாந்து அணி 2-0 என்ற கணக்கில் முழுமையாக கைப்பற்றியது. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையே 3 ஒரு நாள் மற்றும் மூன்று 20 ஓவர் போட்டி தொடர் நடைபெறுகிறது.



இதில் நியூசிலாந்து-இலங்கை அணிகள் இடையிலான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி ஆக்லாந்தில் இந்திய நேரப்படி நாளை (சனிக்கிழமை) காலை 6.30 மணிக்கு தொடங்குகிறது. நியூசிலாந்து அணி டாம் லாதம் தலைமையிலும், இலங்கை அணி தசுன் ஷனகா தலைமையிலும் களம் காணுகிறது. டெஸ்ட் போட்டியில் அசத்திய நியூசிலாந்து அணி அந்த ஆதிக்கத்தை ஒருநாள் தொடரிலும் நீட்டிக்க முயற்சிக்கும். அதேநேரத்தில் டெஸ்ட் தோல்விக்கு பதிலடி கொடுக்க இலங்கை அணி எல்லா வகையிலும் போராடும். எனவே இந்த போட்டி பரபரப்பு நிறைந்ததாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# மதுரை கோர்ட் வளாகத்தில் இன்று கூடுதல் கட்டிட அடிக்கல் நாட்டுவிழா

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்பு

**மதுரை, மார்ச் 25-**

மதுரை மாவட்ட கோர்ட்டு கூடுதல் கட்டிட அடிக்கல் நாட்டு விழா, மயிலாடுதுறை மாவட்ட கோர்ட்டுகள் தொடக்க விழா ஆகிய நிகழ்ச்சிகள் மதுரை மாவட்ட கோர்ட்டு வளாகத்தில் இன்று (25-ம் தேதி) காலை 10.30 மணிக்கு நடக்கிறது.

இந்த நிகழ்ச்சியில் சென்னை ஐகோர்ட்டு தலைமை நீதிபதி டி.ராஜா வரவேற்று பேசுகிறார். சுப்ரீம் கோர்ட்டு தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தலைமை தாங்கி மதுரை மாவட்ட கோர்ட்டு கூடுதல் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டி தொடக்கவுரை ஆற்றுகிறார். பின்னர் மயிலாடுதுறை மாவட்ட கோர்ட்டு மற்றும் செசன்ஸ் கோர்ட்டுகளை மதுரையில் இருந்தபடி வீடியோ கான்பரன்ஸ் மூலம் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்து பேசுகிறார். மயிலாடுதுறை தலைமை குற்றவியல் மாஜிஸ்திரேட்டு கோர்ட்டை மத்திய சட்டத்துறை மந்திரி கிரண் ரிஜ்ஜு தொடங்கி வைத்து பேசுகிறார். பின்னர் தமிழக அரசின் தலைமைச் செயலாளர் இறையன்பு, தமிழ்நாடு அட்வகேட் ஜெனரல் சண்முகசுந்தரம் ஆகியோர் வாழ்த்தி பேசுகின்றனர். இந்த நிகழ்ச்சியில் சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகள் ராம சுப்பிரமணியன், எம்.எம். சுந்தரேஷ், தமிழக அமைச்சர்கள் ரகுபதி, மூர்த்தி, பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், சென்னை, மதுரை ஐகோர்ட்டு நீதிபதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொள்கின்றனர். சென்னை ஐகோர்ட்டு நீதிபதி மகாதேவன் நன்றி கூறுகிறார்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் மதுரை கோர்ட்டு கூடுதல் கட்டிட திறப்பு விழாவில் பங்கேற்பதற்காக இன்று சென்னையில் இருந்து விமானம் மூலம் மதுரை வருகிறார். விமான நிலையத்தில் அவரை கலெக்டர் அனீஷ்சேகர் மற்றும் உயர் அதிகாரிகள் பூங்கொத்து கொடுத்து வரவேற்கின்றனர்.

பின்னர் முதல்வர் மு.க.ஸ்டாலின், விழா நடைபெறும் மதுரை மாவட்ட கோர்ட்டு வளாகத்துக்கு காரில் செல்கிறார். இதைத்தொடர்ந்து நிகழ்ச்சிகள் தொடங்குகின்றன. இதில் மு.க. ஸ்டாலின் கலந்து கொண்டு பேசுகிறார். அதன் பிறகு மதுரை சுற்றுலா விருந்தினர் மாளிகைக்கு சென்று சிறிது நேரம் ஓய்வெடுக்கிறார். பின்னர் அங்கிருந்து காரில் புறப்பட்டு மதுரை விமான நிலையம் செல்கிறார். அங்கிருந்து அவர் விமானம் மூலம் சென்னைக்கு புறப்பட்டுச் செல்கிறார். முதல்வரின் வருகையை முன்னிட்டு மதுரை நகரில் 1,500 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர். மதுரை மாவட்ட கோர்ட்டில் 3 அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

### ராகுலுக்கு சிறை தண்டனை:

# ஜனாதிபதியிடம் முறையிட காங்கிரஸ் திட்டம்

**புதுடெல்லி, மார்ச் 25-**

காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்திக்கு 2 ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்ட விவகாரம் தொடர்பாக ஜனாதிபதி திரௌபதி முர்முவிடம் முறையிட காங்கிரஸ் கட்சி திட்டமிட்டுள்ளது.

பிரதமர் மோடியை அவதூறாகப் பேசிய வழக்கில், காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்திக்கு 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து குஜராத்தின் சூரத் நீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்ப்பு வழங்கியது. இதையடுத்து, ராகுல் காந்தி தரப்பில் ஜாமீன் கோரப்பட்டது. இதை ஏற்றுக் கொண்ட மாஜிஸ்திரேட் வர்மா, அவருக்கு 30 நாள் ஜாமீன் வழங்கி, அதுவரை தண்டனையை நிறுத்தி வைக்க உத்தரவிட்டார்.

இந்நிலையில், இந்த விவகாரத்தை சட்ட ரீதியாக மட்டுமில்லாமல் அரசியல் ரீதியாகவும் கையாள காங்கிரஸ் கட்சி திட்டமிட்டுள்ளது. ராகுல் காந்திக்கு தண்டனை விதிக்கப்பட்டதை அடுத்து காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவின் டெல்லி இல்லத்தில் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. இதில், கட்சியின் மூத்த தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதில், டெல்லியில் நாடாளுமன்ற வளாகத்தில் இருந்து விஜய் சவுக் நோக்கி நேற்று (வெள்ளிக்கிழமை) ஊர்வலமாகச் சென்று அங்கு போராட்டத்தில் ஈடுபடுவது என முடிவெடுக்கப்பட்டது. மேலும், ஜனாதிபதியை சந்தித்து அவரிடம் மனு அளிக்கவும் திட்டமிடப்பட்டு, இதற்காக ஜனாதிபதியிடம் நேரம் கேட்கப்பட்டுள்ளது. இந்தப் போராட்டத்தில் காங்கிரஸ் மட்டுமின்றி, எதிர்க்கட்சிகளும் பங்கேற்க அழைப்பு விடுக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

மேலும், வரும் திங்கள்கிழமை அனைத்து மாநிலங்களிலும் போராட்டம் நடத்தவும் காங்கிரஸ் திட்டமிட்டுள்ளது. காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பு பொதுச் செயலாளர் ஜெயராம் ரமேஷ் இதனைத் தெரிவித்துள்ளார்.

### வேங்கைவயல் விவகாரத்தை விசாரிக்க

# சிறப்பு புலனாய்வுக் குழு கோரிய மனு சுப்ரீம் கோர்ட்டில் தள்ளுபடி

**புதுடெல்லி, மார்ச் 25-**

வேங்கைவயல் விவகாரத்தில் சிறப்பு புலனாய்வு குழு விசாரணை கோரிய மனுவை தள்ளுபடி செய்து சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டுள்ளது. மேலும் மனுதாரர் இதுதொடர்பாக சென்னை ஐகோர்ட்டை நாட அறிவுறுத்தியுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம் வேங்கைவயல் கிராமத்தில் உள்ள குடிநீர் தொட்டியில் மலம் கலந்த விவகாரம் தொடர்பாக பண்ருட்டியை சேர்ந்த வி.மார்க்ஸ் ரவீந்திரன் சார்பில், வக்கீல் ஜி.எஸ்.மணி என்பவர் சுப்ரீம் கோர்ட்டில் பொதுநல மனுவை தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவில், புதுக்கோட்டை மாவட்டம் வேங்கைவயல் கிராமத்தில் குடிநீர் தொட்டியில் அசுத்தம் கலந்த விவகாரத்தில் உண்மையான குற்றவாளிகளை கண்டறிய தமிழ்நாடு அரசு தவறிவிட்டது.

எனவே, இந்த விவகாரத்தை சி.பி.ஐ. அல்லது ஓய்வு பெற்ற சுப்ரீம் கோர்ட் நீதிபதி தலைமையில் சிறப்பு புலனாய்வு குழு விசாரணைக்கு மாற்றி உத்தரவிட வேண்டும். மேலும், இந்த சம்பவத்தை தடுக்க தவறிய அதிகாரிகள் மீது துறைசார்ந்த நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்த மனு சுப்ரீம் கோர்ட் நீதிபதி சஞ்சய் கிஷன் கவுல் தலைமையிலான அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது குறிப்பிட்ட மாநிலத்தில், குறிப்பிட்ட பகுதியில் நடைபெறும் விவகாரத்தை விசாரிக்க ஐகோர்ட் இருக்கும் போது சுப்ரீம் கோர்ட் இதில் ஏன் தலையிட வேண்டும் என நீதிபதி சஞ்சய் கிஷன் கேள்வி எழுப்பினார்.

அதனை தொடர்ந்து குடிநீர் தொட்டியில் அசுத்தம் கலந்த விவகாரம் தொடர்பாக சிறப்பு புலனாய்வு குழு விசாரணைக்கு கோரிய மனுவை தள்ளுபடி செய்து நீதிபதி சஞ்சய் கிஷன் உத்தரவிட்டார். மேலும் தேவைப்பட்டால் மனுதாரர் சென்னை ஐகோர்ட்டை நாடலாம் என நீதிபதி அறிவுறுத்தினார்.

# ராகுல் மீதான நடவடிக்கை: எதிர்க்கட்சி தலைவர்கள் கண்டனம்

**புதுடெல்லி, மார்ச் 25-**

ராகுல் காந்தி அவர்களை பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து தகுதி நீக்கம் செய்த பாசிச நடவடிக்கைக்கு எனது கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று மு.க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

2019ஆம் ஆண்டு கர்நாடகாவில் நடைபெற்ற தேர்தல் பிரசாரத்தின் போது, ராகுல் காந்தி தெரிவித்த கருத்துகளுக்கு எதிராக அவர் மீது சூரத் நீதிமன்றத்தில் அவதூறு வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பில், ராகுல் காந்தி குற்றவாளி என உறுதி செய்து அவருக்கு 2 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து சூரத் நீதிமன்றம் உத்தரவிட்டது. நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்ய ராகுல் காந்திக்கு 30 நாட்கள் அவகாசமும் உடனடியாக கைது செய்யப்படுவதைத் தவிர்க்கும் வகையில் அவருக்கு ஜாமீனும் வழங்கியது சூரத் நீதிமன்றம்.

இந்த நிலையில் தொடர்ந்து மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் அடிப்படையில், ராகுல் காந்தி தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். நீதிமன்ற தீர்ப்பையடுத்து, வயநாடு மக்களவை உறுப்பினர் பொறுப்பிலிருந்து ராகுல் காந்தியைத் தகுதிநீக்கம் செய்து மக்களவை சபாநாயகர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இந்நிலையில் ராகுல் மீதான தகுதிநீக்க நடவடிக்கைக்கு எதிர்க்கட்சி தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

**ஜெய்ராம் ரமேஷ்:**

ராகுல் தகுதி நீக்கத்தை எதிர்த்து சட்ட, அரசியல் ரீதியாக போராடுவோம். எங்களின் குரலை நசுக்க முடியாது. நாங்கள் அமைதியாக இருக்க மாட்டோம். பார்லி., கூட்டுக் குழு விசாரணை மற்றும் பிரதமர் மோடிக்கும் அதானிக்குமான தொடர்பு போன்றவற்றை மறைக்க ராகுகல் தகுதி நீக்கப்பட்டுள்ளார். இது இந்திய ஜனநாயகத்தின் மீதான தாக்குதல் என கூறி உள்ளார்.

**உத்தவ தாக்கரே:**

ராகுலின் வேட்புமனு ரத்து செய்யப்பட்டது. திருடன், திருடன் என்று அழைப்பது நம் நாட்டில் குற்றமாகி விட்டது. திருடர்களும் கொள்ளையர்களும் இன்னும் சுதந்திரமாக இருக்கிறார்கள். ராகுல் தண்டிக்கப்பட்டுள்ளார். இது ஜனநாயகத்தை கொலை செய்துள்ளனர். இது சர்வாதிகாரத்தை முடிவு கட்டுவதற்கான துவக்கம். எதிர்த்து போராடுவது மட்டுமே நல்ல முடிவை கொடுக்கும் என கூறினார்.

**பினராயி விஜயன்:**

கேரள முதல் மந்திரி பினராயி விஜயன் ராகுல் காந்தி தகுதி நீக்கம் செய்யப்பட்டது, சங்பரிவார் அமைப்புகள் ஜனநாயகத்தின் மீது தொடுத்த வன்முறை தாக்குதல் என்று கூறியுள்ளார்.

**கெஜ்ரிவால்:**

நாட்டில் ஒரே ஒரு கட்சியும் ஒரே ஒரு தலைவரும் தான் இருக்க வேண்டும் என்ற சூழலை அவர்கள் (பாஜக) உருவாக்குகிறார்கள். பிற அனைத்துக் கட்சிகளையும் ஒழித்துவிட வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள். இதைத்தான் சர்வாதிகாரம் என்கிறோம். பிரிட்டிஷ் ஆட்சி காலத்தை விட மோசமான அரசாங்கமாக மோடியின் அரசு உள்ளது

# ஜனநாயகம் என்ற சொல்லை உச்சரிக்கும் தகுதியை பாரதிய ஜனதா இழந்து விட்டது

## ராகுல் மீதான நடவடிக்கைக்கு முதல்வர் கண்டனம்

சென்னை, மார்ச்25-

ராகுல்காந்தி மீதான தகுதிநீக்க நடவடிக்கைகளின் மூலமாக ஜனநாயகம் என்ற சொல்லை உச்சரிக்கும் தகுதியை பா.ஜ.க. இழந்து விட்டது என்று கூறியுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின், ராகுல் காந்தி மீதான நடவடிக்கையை திரும்பப்பெற வேண்டும் என்றும், ராகுல் காந்தி மீதான நடவடிக்கை என்பது முற்போக்கு ஜனநாயக சக்திகள் மீதான தாக்குதல் என்றும் அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

இந்தியாவின் இளம் தலைவர் ராகுல்காந்தியை நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து தகுதி நீக்கம் செய்த பாசிச நடவடிக்கைக்கு எனது கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அகில இந்திய அரசியல் கட்சியின் பெருந் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினருக்கு கூட கருத்துச்சொல்லும் ஜனநாயக உரிமை என்பது கிடையாது என்று மிரட்டும் தொனியில் இருக்கிறது இந்த நடவடிக்கை.

ராகுல்காந்தி பேசிய கருத்து அவதூறானது என்ற அடிப்படையில் சூரத் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கில் அவருக்கு 2 ஆண்டுகள் தண்டனை தரப்பட்டுள்ளது.

இந்த தண்டனையை விதித்த நீதிபதி ஹெச்.ஹெச்.வர்மா, இந்த வழக்கில் மேல்முறையீடு செய்வதற்காக கால அவகாசத்தை ராகுல்காந்திக்கு வழங்கி இருக்கிறார். வழக்கை மேல்முறையீடு செய்வதற்கு வசதியாக தீர்ப்பை அமல்படுத்துவதற்கு 30 நாட்கள் தடை விதிக்கிறேன் என்றும் சொல்லி இருக்கிறார்.

மேல்முறையீடு செய்வது என்பது தண்டனை பெற்ற எவருக்கும் உள்ள அடிப்படை உரிமை ஆகும். அதனை தனது தீர்ப்பிலேயே நீதிபதி சுட்டிக்காட்டி 30 நாட்கள் வழங்கி இருக்கிறார். அதற்குள் ராகுல்காந்தியை தகுதி நீக்கம் செய்வது ஒரு நாடாளுமன்ற உறுப்பினரின் ஜனநாயக உரிமையை பறிப்பது ஆகும்.

2 ஆண்டு சிறைத்தண்டனையை உச்சநீதிமன்றம் உறுதிப்படுத்திவிடவில்லை. மாவட்ட நீதிமன்றம்தான் தீர்ப்பு தந்துள்ளது. உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு இருக்கிறது.

இறுதி தீர்ப்பை வழங்க வேண்டியது உச்சநீதிமன்றம் ஆகும். இதற்காகவே காத்திருந்ததை போல 23-ம் தேதி தீர்ப்பு, 24-ம் தேதி பதவிப்பறிப்பு என்று நடவடிக்கை எடுத்துள்ளது பா.ஜ.க. அரசு.

ராகுல்காந்தியை பார்த்து எந்தளவுக்கு பா.ஜ.க. தலைமை பயந்து இருக்கிறது என்பது இதன் மூலம் தெரிகிறது. அவரது இந்திய ஒற்றுமை பயணம் இந்திய மக்களிடையே ஏற்படுத்தியிருக்கும் தாக்கமும் இதற்கு காரணம் ஆகும்.

இந்தத் தகுதிநீக்க நடவடிக்கைகளின் மூலமாக ஜனநாயகம் என்ற சொல்லை உச்சரிக்கும் தகுதியை பா.ஜ.க. இழந்து விட்டது.

நாடாளுமன்றத்தில் எடுத்து வைக்கப்படும் குற்றச்சாட்டுகளுக்கு பதில் சொல்லாமல், கேள்வி கேட்டவரை அங்கிருந்து அப்புறப்படுத்துவது ஒன்றிய அரசுக்கு அழகல்ல. இந்த நடவடிக்கையை திரும்பப்பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ராகுல்காந்தி மீதான நடவடிக்கை என்பது முற்போக்கு ஜனநாயக சக்திகள் மீதான தாக்குதல் என்பதை உணர்ந்து இந்திய அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து இதனை எதிர்க்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

# எம்.பி. பதவியில் இருந்து...(1-ம் பக்க தொடர்ச்சி

கூறும்போது, சட்டங்களை இயற்றும் மக்களவையின் எம்.பி.யாக ராகுல் காந்தி உள்ளார். அவருக்கு சட்ட விதிகள் அனைத்தும் தெரியும். அவரே விதிகளை மீறியுள்ளார். அவருக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும். இந்த தண்டனை மற்றவர்களுக்கு ஒரு பாடமாக அமைய வேண்டும் என்றார்.

ராகுல்காந்தி தரப்பு வழக்கறிஞர்கள் வாதாடும்போது, வழக்கில் மன்னிப்பு கோர விரும்பவில்லை. ராகுல் காந்தி ஊழலுக்கு எதிராகவே பேசினார். அவர் தனது கடமையை மட்டுமே செய்தார் என்றனர்.

### 30 நாட்கள் ஜாமீன்

இருதரப்பு வாதங்களையும் கேட்ட மாஜிஸ்திரேட் வர்மா, ராகுலகாந்திக்கு 2 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், ரூ.15,000 அபராதமும் விதித்தார். இதையடுத்து, ராகுல்காந்தி தரப்பில் ஜாமீன் கோரப்பட்டது. இதை ஏற்றுக் கொண்ட மாஜிஸ்திரேட் வர்மா, அவருக்கு 30 நாள் ஜாமீன் வழங்கி, அது வரை தண்டனையை நிறுத்திவைக்க உத்தரவிட்டார்.

### மேல்முறையீடு

ராகுல்காந்தியின் வழக்கறிஞர் பாபு கூறும்போது, இந்த தீர்ப்பை எதிர்த்து, உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்வோம். நீதித்துறையின் மீது எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது என்றார். ராகுல் காந்தி தனது டுவிட்டர் பதிவில், எனது மதம் உண்மை, அகிம்சையை அடிப்படையாக கொண்டது. உண்மையே எனது கடவுள். அகிம்சை அதை அடையும் வழி. இது காந்தியடிகளின் பொன்மொழி என்று தெரிவித்திருந்தார்.

### எம்.பி. பதவி பறிப்பு

இந்நிலையில், இந்த வழக்கில் குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட ராகுல் காந்தியின் எம்பி பதவி பறிக்கப்பட்டுள்ளது. இது குறித்து மக்களவை செயலாளர் உத்பல்குமார் சிங் வெளியிட்டுள்ள அறிவிக்கையில், குற்றவியல் வழக்கில் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் ராகுல்காந்திக்கு எதிராக சூரத் நீதிமன்றம் 2 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

எனவே, மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் 1951-ன் பிரிவு 102(1)(e)-ன் கீழ் கேரளாவின் வயநாடு தொகுதி மக்களவை உறுப்பினர் எனும் நிலையில் இருந்து ராகுல் காந்தி தகுதிநீக்கம் செய்யப்படுகிறார். அவரது தகுதி நீக்கம் தீர்ப்பு வெளியான நாளில் (23.03.2023) இருந்தே அமலுக்கு வந்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பதவி தப்புமா?

சுப்ரீம் கோர்ட் தீர்ப்பின்படி, குற்றவியல் வழக்கில் 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதால் ராகுல்காந்தியின் எம்.பி. பதவி பறிபோயுள்ளது. சூரத் நீதிமன்றம் அவருக்கு விதித்த தண்டனையை ஒரு மாதத்துக்கு மட்டும் நிறுத்தி வைத்துள்ளது.

தீர்ப்பை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்ய அவரது தரப்பில் முடிவு செய்யப்பட்டுள்ளது. உயர்நீதிமன்றத்தின் முடிவை பொறுத்தே, ராகுல்காந்தியின் எம்.பி. பதவி நிரந்தரமாக பறிபோகுமா? அல்லது தப்புமா? என்பது தெரியவரும்.

### போட்டியிட முடியாது

இந்த விவகாரம் குறித்து சட்ட நிபுணர்கள் கூறும்போது, ராகுல் வழக்கில், அவர் சுப்ரீம் கோர்ட் வரை மேல்முறையீடு செய்ய முடியும். ஒருவேளை சுப்ரீம் கோர்ட்டும் அவர் குற்றவாளி என்று தீர்ப்பளித்தால், கண்டிப்பாக 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவிக்க நேரிடும். அவர் விடுதலையான நாள் முதல் 6 ஆண்டுகளுக்கு தேர்தலில் போட்டியிட முடியாது என்றனர்.

# கவர்னரின் ஒப்புதலுக்காக...(1-ம் பக்க தொடர்ச்சி

ஓ.பன்னீர் செல்வம், தளவாய் சுந்தரம் (அ.தி.மு.க.) உள்பட சட்ட மன்ற அனைத்துக்கட்சிகளின் எம்.எல்.ஏ.க்களும் ஆதரித்து பேசினார்கள்.

இதைத் தொடர்ந்து ஆன்லைன் சூதாட்ட தடை சட்ட மசோதா சட்டசபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. இந்த மசோதாவில் என்னென்ன காரணங்களுக்காக ஆன்லைன் சூதாட்டம் தடை செய்யப்படுகிறது என்ற விவரங்கள் இடம்பெற்றுள்ளன. அரசியல் சட்டத்தின் 7-வது அட்டவணையில் உள்ள மாநில அதிகாரப்பட்டியலின் 34-வது பிரிவில் இதுதொடர்பாக கூறப்பட்டுள்ள விதிகளை சுட்டிக்காட்டி இது தொடர்பாக சட்டம் இயற்றும் அதிகாரம் மாநில அரசுக்கு உண்டு என்றும் அதில் குறிப்பிடப்பட்டு உள்ளது.

சுமார் 8 பக்கங்கள் கொண்ட இந்த சட்ட மசோதா முழு விவரங்களுடன் முழுமையாக தயாரிக்கப்பட்டு நேற்று முன்தினம் இரவு தமிழக அரசின் சட்டத்துறைக்கு அனுப்பப்பட்டது. சட்டத்துறையில் நேற்று காலையில் இந்த மசோதாவின் அனைத்து பக்கங்களும் மீண்டும் சரிபார்க்கப்பட்டது. சட்ட விதிகள் அனைத்தும் முறையாக தெளிவுபடுத்தப்பட்டு இருந்ததால் சட்டத்துறையும் நேற்று கவர்னரின் ஒப்புதலுக்காக அனுப்ப அனுமதித்தது.

இதைத்தொடர்ந்து சட்டத்துறை அதிகாரிகள் நேற்று கிண்டியில் உள்ள கவர்னர் மாளிகைக்கு சென்று ஆன்லைன் சூதாட்ட தடை சட்ட மசோதாவை அதிகாரிகளிடம் வழங்கினர்.

தமிழக சட்டசபையில் ஒரு சட்டம் 2-வதுமுறையாக நிறைவேற்றப்பட்டு அனுப்பப்பட்டால் அதற்கு கவர்னர் ஒப்புதல் கொடுத்து தான் ஆக வேண்டும். அந்த வகையில் ஆன்லைன் சூதாட்ட தடை சட்ட மசோதாவுக்கு கவர்னர் ஆர்.என். ரவி ஒப்புதல் வழங்குவாரா? அல்லது சட்ட விதிகளை சுட்டிக்காட்டி கையெழுத்து போட மறுப்பாரா? என்பது இனிமேல் தான் தெரியவரும்.

தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி நேற்று முன்தினம் டெல்லி சென்று மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை சந்தித்து இதுதொடர்பாக கருத்துக்கள் கேட்டதாக தெரிகிறது. சட்ட நிபுணர்களிடமும் இதுதொடர்பாக ஆலோசித்து உள்ளார். இந்த நிலையில் நேற்று மாலை கவர்னர் ஆர்.என். ரவி சென்னை திரும்பினார். எனவே தமிழக அரசு மீண்டும் நிறைவேற்றி அனுப்பி உள்ள ஆன்லைன் தடை சட்ட மசோதாவுக்கு கவர்னர் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளிப்பாரா என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

# தமிழக பாலிடெக்னிக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை குறைந்து வருகிறது

## சட்டசபையில் அமைச்சர் பொன்முடி தகவல்

சென்னை, மார்ச்25-

தமிழ்நாட்டில் உள்ள பாலிடெக்னிக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை குறைந்து வருகிறது என அமைச்சர் பொன்முடி தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டசபையில் நிதிநிலை அறிக்கை மற்றும் வேளாண் நிதி நிலை அறிக்கை மீதான இரண்டாம் நாள் விவாதம் நேற்று நடந்தது. அப்போது அந்தியூரில் பலவகை தொழில்நுட்ப கல்லூரி துவக்க அரசு முன்வருமா என அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடாசலம் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்து உயாகல்வித்துறை அமைச்சர் பொன்முடி பேசியதாவது,



அந்தியூரில் அரசு பாலிடெக்னிக் கல்லூரி ஒன்றும், சுயநிதி பாலிடெக்னிக் கல்லூரி இரண்டும் உள்ளது. இதில உள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 1150 ஆகும். ஆனால் இந்த ஆண்டு சேர்ந்துள்ள மாணவர்களின் எண்ணிக்கை 438 ஆகும்.

இவ்வளவு காலியிடங்கள் உள்ளது. சட்டமன்ற உறுப்பினர் காலியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கட்டும். அதன் பின்னர் எதிர்கால தேவைக்கு ஏற்ப அப்போது முடிவு எடுப்போம்.

தமிழ்நாட்டில் உள்ள பாலிடெக்னிக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை குறைந்து வருகிறது. தமிழகத்தில் உள்ள பாலிடெக்னிக் கல்லூரிகளில் உள்ள 6295 இடங்களில் 3184 இடங்கள் காலியாக உள்ளது. தொழில்துறை 4.0 திட்டத்தில் பாலிடெக்னிக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கையை அதிகரிக்க திறன்மிகு மையங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் பொன்முடி தெரிவித்தார்.



● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று, தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் சார்பில் தயாரிக்கப்பட்ட தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை திட்டம்-2023 மற்றும் மாநில பேரிடர் மேலாண்மை கொள்கை ஆகியவற்றை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், தலைமைச்செயலாளர் வெ.இறையன்பு, கூடுதல் தலைமைச்செயலாளர் எஸ்.கே.பிரபாகர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை குமார்ஜெயந்த் ஆகியோர் கலந்து கொண்டனர்.



● சென்னை தலைமைச்செயலகத்தில், முதல்வர் மு.க.ஸ்டாலினை, பத்மஸ்ரீ விருதுகள் பெற்ற இருளர் பழங்குடியினத்தை சேர்ந்த பாம்புபிடி வீரர்கள் மாசி சடையன், வடிவேல் கோபால் ஆகியோர் தங்களது குடும்பத்தினருடன் நேற்று சந்தித்து வாழ்த்து பெற்றனர். அருகில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், ஆதிதிராவிடர் நலத்துறை செயலாளர் ஜி.லட்சுமிபிரியா, பழங்குடினயினர் நலத்துறை இயக்குநர் எஸ்.அண்ணாதுரை ஆகியோர் உள்ளனர்.




● சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்று வரும் தொழில்நுட்பம், தொழில்முனைவோர் மற்றும் திறன் மேம்பாட்டு 2-ம் நாள் உச்சி மாநாட்டில், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர் மனோதங்கராஜ், துறை செயலாளர் ஜெ.குமரகுருபரன், மேலாண்மை இயக்குநர் கமல் கிஷோர், முதன்மை செயல் அலுவலர் முருகவேல் ஜானகிராமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



● சென்னை அண்ணா சதுக்கம் வளாகத்தில் அமைந்துள்ள கவிச்சக்கரவர்த்தி கம்பரின் திருவுருவச்சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப்படத்திற்கு நேற்று, தமிழ்நாடு அரசின் சார்பில், அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, மா.சுப்பிரமணியன் ஆகியோர் மலர்தூவி மரியாதை செலுத்தினர். அருகில் ஏ.எம்.வி.பிரபாகரராஜா எம்.எல்.ஏ., தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் நா.அருள், ஜெர்மன் தமிழ்த்துறை பேராசிரியர் சுவென் வார்ட்மென் உள்ளனர்.




● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று நடைபெற்ற தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டத்தில், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், கருணை அடிப்படையில் வாரிசுதாரருக்கு பணி நியமன ஆணையை வழங்கினார். அருகில் வீட்டுவசதித்துறை முதன்மைச்செயலாளர் அபூர்வா, மேலாண்மை இயக்குநர் ம.கோவிந்தராவ் ஆகியோர் உள்ளனர்.